

# திருக்கோயில்

நவம்பர் 1986 விலை ரூ. 2-00





மயிலை அருள்மிகு கோலவிழியம்மன் ஆலயத்தில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர். எம். வீ. அவர்களின் துணைவியார் திருமதி இராஜம்மாள் வீரப்பன் அவர்களின் முன்னிலையில் விளக்குப் பூசை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அறநிலையத்துறையின் ஆணையர் திரு க. சுந்தரமூர்த்தி ஐ. ஏ. எஸ். அவர்களும், தக்கார் சிவநெறிச் செம்மல் மா. து. குப்புசாமி அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனா.

[முகப்பு]

கந்தர் சஷ்டி விரதமிருந்து
அடியவர்கள் முருகப் பெருமானை
வணங்கி வழிபடும் காட்சி.

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை 28 | திருவள்ளுவர் ஆண்டு 2017 அட்சய ஆண்டு கார்த்திகைத் திங்கள் நவம்பர் 1986 விலை ரூ. 2-00 | மணி 11 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

உயர்திரு
ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா ரூ 24.00 மட்டும்.

திருக்கோயில் இதழின் ஆயுள் சந்தா ரூ. 300 மட்டும்.

இதழ்கள் தவறாமல் கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்கவேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை. விற்பனையாளர்கள் மற்ற விவரங்களைத் தெரிந்து கொள்ள இவ்வலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## பொருளடக்கம்

அறநிலையத்துறை சாதனைகளை விவரிக்கும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்களின் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' நூல் வெளியீட்டு விழா.

விநாயகனே வினை தீர்ப்பவனே
—நஜன்

கோயம்பேடு குசலபுரீஸ்வரர் ஆலயம்
—K. R. நந்தகோபால்

நவராத்திரி
—T. S. குப்பண்ணசாஸ்திரிகள்

எண்வகை யோகம்
— டாக்டர் பொற்கோ

ஆலய மேம்பாட்டுத் திட்டத்தினால் ஒரு வேளை பூசைநிதியாக ரூ. 5000 நிதி உதவி பெற்ற ஆலயங்கள்

அணுக்கப்பிள்ளை சுந்தரர்
—டாக்டர் இரா. நாகசாமி

ஐந்தெழுத்தான் தந்த அற்புதத் தீர்ப்பு
—டாக்டர் சிவ. பார்வதி

காமாட்சியும் காமாக்கியாவும்
—டாக்டர் ந. சஞ்சீவி

பாரதப் போரில் பார்த்தசாரதி
டாக்டர் த. அமிர்தலிங்கம்


வாசகர் எண்ணங்கள்

## தீபாவளி வாழ்த்துக்கள்

திருக்கோயில் வாசகர்களுக்கு எங்கள் மனம் நிறைந்த தீபாவளி நல் வாழ்த்...


முகப்பு கருத்து

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை...



# அறநிலையத் துறையின் சாதனைகளை விவரிக்கும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்களின் "ஒன்றேகுலம் ஒருவனே தேவன்" நூல் வெளியீட்டு விழா.

"செவ்வேள்"



**நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள மாண்புமிகு டாக்டர் தமிழக முதல்வர்**

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர். எம். வீ. அவர்கள் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற ஒப்பற்ற நூலைப்படைத் திருக்கிறார்கள். கடந்த 9 ஆண்டுக் காலங்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் தமிழக அரசு, அறநிலையத் துறையில் ஆற்றியுள்ள சாதனைகளை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் அனைத்து மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் ஆற்றிய கருத்தோட்டம் மிக்க 14 சொற்பொழிவு [illegible] இந்நூலாக உருவாகியிருப்பது குறிப்பிடத்

[illegible] தலிங்கம் தொகுத்துவழங்க [illegible] யத்தார் வெளியிட்டுள்ள [illegible] தேவன்' நூலின் வெளியீட்டு விழா மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் மணிவிழா நிறைவு நாளான 9-9-86 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் நூலினை வெளியிட, பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசாமி ஆலயத்தின் தக்கார் திரு க. பொன்னுசாமி அவர்கள் நூலின் முதல்நூ[illegible] படிகளை, வாங்கிக் கொண்டார்கள்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அமுதம் நிகர் 14 சொற்பொழிவுகள் பின்வருமாறு :

1. தஞ்சை-ஆலய மேம்பாட்டு விழா செயல் முறைத் துவக்கவிழாச் சிறப்புரை

2. வடபழநி—150 கிராமக் கோயில்களுக்கு நிதி வழங்கு விழாச் சிறப்புரை.

3. இரத்தினகிரி—90 சிறப்புத் திருமண விழாச் சிறப்புரை.

4. தஞ்சை—இராஜராஜன் சதய விழாச் சிறப்புரை.

5. திருமயிலை—தெய்வச் சேக்கிழார் திருநாள்விழாச் சிறப்புரை.

6. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம்—திருக்கோயில் தூய்மைப் பராமரிப்பு விழாச் சிறப்புரை.

7. காந்தி கிராமப் பல்கலைக் கழகம்—அகில உலக இளைஞர் கருத்தரங்கில் ஆற்றிய சிறப்புரை.

8. திருச்செங்கோடு—மலைப்பாதை [illegible] கல் நாட்டு விழாச் சிறப்புரை.

9. தருமபுரம்—அகிலஉலக சைவ சித்தா[illegible] மாநாட்டுச் சிறப்புரை.

10. சென்னை—ஆதிபராசக்தி மாநாட்டு[illegible] சிறப்புரை.

11. சட்டப்பேரவை—திருமடங்களை, அ[illegible] சேர்ப்பது பற்றிய சட்டதிருத்தத்தை வ[illegible] ஆற்றிய சிறப்புரை.

*12.* சென்னை—வள்ளலார் காந்தி விழாச் சிறப்புரை.

*13.* திருநெல்வேலி—மேலச்செவல் ஆலயக் குடமுழுக்கு விழாச் சிறப்புரை.

*14.* பழநி—அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி ஆலயத் திருப்பணித் தொடக்க விழாச் சிறப்புரை.

மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், இந் நூலுக்கு வழங்கியுள்ள வாழ்த்துரை வருமாறு :

''எனது அருமை உடன் பிறப்பும், தமிழக அமைச்சருமான திரு இராம. வீரப்பன் அவர்கள் அறநிலையத்துறையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சாதித்துள்ள சாதனைகள் குறித்து, பல்வேறு நேரங்களில்ஆற்றிய உரைகள் நூல் வடிவில் வெளி வந்திருப்பதைப் படித்து மகிழ்ந்தேன்.

சிறப்பான கருத்துக்களைச் சீரிய முறையில் தாங்கி வரும் இந்நூலுக்கு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்கிற அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை வாசகமே தலைப்பாக இடப்பட்டிருப்பது பொருத்தமான ஒன்றாகும்.

இந்த நன் முயற்சிக்கு எனது இனிய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


அண்ணா நாமம் வாழ்க.''

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திருமிகு ந. நல்லுசாமி அவர்கள், ''பலதுறை கருத்து முத்துக்களைத் தாங்கிய ''புதிய சிந் தனைகள்' நூல் சென்ற ஆண்டில் வெளியாகி ஒரு வரலாறு படைத்தது. மாண்புமிகு ஆர். எம். வீ. அவர்களின் ஆன்மீக - அறநிலையத்துறைச் சிந் தனைகளைத் தாங்கிவரும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எனும் இந்த நூல் அவருடைய புக ழுக்குப் புகழைச் சேர்த்து ஒரு புதிய வரலாறு படைக்க இந்த ஆண்டு உருவாகி இருக்கிறது. எத்தனை முறை படித்தாலும் படிக்கப் படிக்கத் திகட்டாமல் திகழும் என்று அறிஞர்கள் சிறந்த நூலுக்கு எடுத்துக் காட்டியுள்ள இலக்கணங்கள் பொருந்தியிருக்கும் இந்நூலேநன்னூல் பொன்னூல்' எனப் பாராட்டியிருக்கிறார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் 'கடவுள் நம்பிக்கை மனிதன் யோக்கியனாகஇருக்க வும் வாழவும் தேவை என்பது ஆர். எம். வீ. அவர்களின் தெளிவான முடிவு, கருத்து. எண்ணற்ற உவமைகள் மூலம் இக்கருத்தினை விளக்கி அவர் உரை நிகழ்த்துவது அற்புதமாக அமைந்து விளங்குகிறது'' என்று தம் உள்ளக் கருத்தை வெளி யிட்டுப் பாராட்டியிருக்கிறார்கள்.

அறநிலையத்துறை ஆணையர் திரு. க.சுந்தர மூர்த்தி ஐ. ஏ. எஸ். அவர்களும் இந்நூலுக்கு விரிவான ஒரு மதிப்புரை வரைந்துள்ளார்கள்.

''பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் சமயத் தத்துவமாக அறிவித்த ஒப் பற்ற ஒருகருத்து 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது. இக்கருத்து ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருமூலரின் திருமந்திரத்தில் இடம்பெற்ற கருத்துதான். ஆனால் இதை நன்கு விளம்பரப்



நூலாசிரியர் மாண்புமிகு ஆர்.எம்.வீ.

படுத்தி, தமிழ்ச் சமுதாயத்தின் சமயத்தத்துவ மாக அதனை அறிவித்த பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களையே சாரும்.

'ஒன்றேகுலம், ஒருவனே தேவன்' என்ற அந்த உயிர்க்கருத்தை இழையோட விட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அறநிலையத்துறை விழாக் களில் பல்வேறு ஆக்கப்பணிகளைத் தொடங்கி வைத்தும், நிறைவேற்றி வைத்தும் ஆற்றிய சிந் தனைச் செறிவுமிக்க 14 சொற்பொழிவுகள் இடம் பெற்றுள்ளன. இச்சொற்பொழிவுகளில் ஆன்மீகத் தலைவர்களாலும் விளக்கப்படாத பல அரிய செய்திகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்'' என ஆணையர் அவர்கள் அளித்துள்ள மதிப்புரை, இந்நூலின் சிறப்பை நமக்கு நன்கு எடுத்துக் காட்டும்.

சிந்தனைச் சித்தர் டாக்டர் வலம்புரிஜான் எம். பி. அவர்களும் இந்நூலுக்கு நூற்றுக்கு நூறு மதிப்பெண்களையும் வழங்கி ''அவரது உள்ளத் திற்கும், உதட்டிற்கும் இடைவெளி இல்லாததால் அவரது சொற்பொழிவுகள் வேறல்ல. அவர் வேறல்ல என்கிற உண்மை இறுக்கத்தின் உயர் நெறிப்பேரொளியை ஒவ்வொரு சொல்லிலும் தரி சிக்கிறோம். விரும்பிக் கேட்கும் விருந்தாகவும், கேடு களைந்திடும் மருந்தாகவும் அண்ணன் ஆர். எம். வீ. அவர்களின் சொற்பொழிவு அமைந் துள்ளது'' என்று பாராட்டியிருப்பது குறிப்பிடத் தக்கது.

ஆன்றோர்களும் சான்றோர்களும் புகழாரங் களை இவ்வாறு சூட்டி வாழ்த்தும் வண்ணம், இவ் வொப்பற்ற நூலைப் படைத்துள்ள மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ அவர்கள், இந்நூலுக்கு தாமும் ஒரு சிறப்புமிகு முன்னுரையை வழங்கியிருக்கிறார்கள். அம்முன் னுரையெனும் பொன்னுரையை அப்படியே இங்கு எடுத்து வெளியிடுவது இந்நூலைப் பற்றியமாண்பு மிகு அமைச்சர் அவர்களின் கருத்தை அறிந்து கொள்ளப் பயன்படுவதாகும்.

''இரண்டாவது முறையாக என்னை நூலாசிரியர் ஆக்கியுள்ளார்கள். இந்தமுறை அருமை நண்பர் டாக்டர் அமிர்தலிங்கம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு நான் பல நிகழ்ச்சிகளில் பல நேரங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளைத் திரட்டி ஒரு நூலாக்கியுள்ளார்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற தலைப்பில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. பத்தாவது திருமுறையான திருமூலர் திருமந்திரத்திலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அற்புதமான சமுதாய சமத்துவச் சொற்றொடரைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தினார்கள்.

இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ள பல சமய சமுதாயக் கருத்துக்கள் இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் என்னால் பேசப்பட்டவை.

எட்டாண்டுகளாக, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவருடைய அமைச்சரவையில் நான் அறநிலையத்துறைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறேன். முப்பத்தைந்து ஆண்டுகளாகச் சமயக் கருத்துக்களைக் குறித்து நான் கொண்டிருந்த கருத்துக்களை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்ற தீவிர உணர்வு இந்தக் காலங்களில் எனக்குத் தோன்றியது.

அறிஞர் அண்ணா அவர்கள் ஏன் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற தத்துவத்தை வழங்கினார்கள் என்று ஆராய ஆரம்பித்து, திருமூலர், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், மாணிக்கவாசகர், சேக்கிழார் என்று பயணம் செய்து, சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார் வரை புரிந்துகொண்டதன் விளைவுகள்தான் இந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்.

இறையுணர்வு, ஆன்மீக நெறி, அறப்பண்பாடு இவைகள் மனித குலத்திற்கு இன்றியமையாத ஒன்று என்பதும், இந்த அடிப்படையில் மனித வாழ்வு கட்டப்படவில்லையானால் போலித்தனமான நெறியற்ற, நோயுற்ற சமுதாயம்தான் மிஞ்சும் என்பதைத்தான் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உயிர்த்தத்துவம் உணர்த்துகிறது என்பதைத் திட்டவட்டமாக - திட்பமாக எடுத்துச் சொல்லியே ஆகவேண்டும் என்ற எழுச்சியின் வடிவம்தான் இந்தநூல்.

இறையுணர்வோடு தமிழ் உணர்வை, சமுதாய உணர்வைக் குழைத்து நமது முன்னோர்கள் ஏழாம் நூற்றாண்டிலேயே வழங்கி உள்ளார்கள். அந்த வரலாறுதான் தொடர்ந்து சென்ற நூற்றாண்டில் வள்ளலார் காலம் வரை வளர்கிறது.

அதனால்தான் ''வாழையடி வாழையென வந்தத் திருக்கூட்ட மரபில் யானொருவன் அன்றோ' என்று வள்ளற்பெருமான் பாடுகிறார்.

சமயமும், இறையுணர்வும் இல்லையானால் தமிழ்மொழியும் அழிக்கப்பட்டிருக்கும் என்பதைத் திருஞான சம்பந்தர் கால வரலாற்றிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

எனவேதான் தமிழ்ப் பாதுகாப்புப் போராட்டம் ஏழாம் நூற்றாண்டிலேயே திருஞான சம்பந்த பெருமான் தலைமையிலேயே தொடங்கியுள்ளது.

''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தன்'' என்று அன்றே பாராட்டப்பட வேண்டிய அவசியம் என்ன என்பதைச் சமயப் பெரியவர்கள், இலக்கிய அறிஞர்கள் ஆராயவேண்டும் என்பது எனது எண்ணம்.

ஆகவே இந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசிக் காலத்தில் வாழ்கிற நாம், இடையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அல்லது அலட்சியப் போக்குகளை அழிவுப் பாதைகளை, புதிய பரிசீலனைக்கு வெளிப்படையான விவாதத்திற்கு உட்படுத்தி ஆகவேண்டும்.

''கண்மூடிப் பழக்கமெல்லாம் மண் மூடிப் போக'' என்ற வள்ளலார் கருத்து, மூடநம்பிக்கையாளர்கட்கு மட்டும் அல்ல. பகுத்தறிவாளர்களுக்கும் பொருந்துவதுதான்.

எனவே சென்ற ஆண்டில் ''புதிய சிந்தனைகள்'' என்ற தலைப்பில் தரப்பட்ட கருத்துக்களை இந்த ஆண்டு ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்றத் தத்துவத் தராசிலே நிறுத்துப் பார்க்க வேண்டுகிறேன்''.

மேற்கண்ட முன்னுரையாம் பொன்னுரையில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர். எம். வீ. அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளபடி, இந்நூலைப் படித்து தங்கள் மனத் தராசிலே நிறுத்துப் பார்ப்பவர்கள் ''அறநிலையத்துறையின் வரலாற்றில் மாண்புமிகு ஆர். எம். வீ.போல் அறநிலையத்துறைக்கு ஊக்கம் கொண்டு ஆக்கம் சேர்க்கும் அமைச்சர் வேறு எவருமில்லை'' என்றே அமைச்சர் அவர்களின் அறநிலையத்துறைப் பணிகளை மனமாரப் பாராட்டி வாழ்த்துவார்கள்.

384 பக்கங்களுடன் வெளிவந்திருக்கும் இம் மிகப் பெரிய - அரிய நூலின் விலை ரூபாய் 36 மட்டுமே. நூலை வேண்டுவோர் அணுக வேண்டிய முகவரி

கலைவாணிப் புத்தகாலயம்,

158, உஸ்மான் ரோடு,

தியாகராய நகர்,

சென்னை—600 017.

# விநாயகனே வினை தீர்ப்பவனே

: நஜன் :

—முன் தொடர்ச்சி—

விபீஷணன் சிறிது தூரம் போனதும் அச் சிறுவன் ரங்கநாத விக்கிரகத்தைக் கீழே வைத்து விட்டான். இதைக்கண்டதும் விபீஷணன் ஓடி வந்து விக்கிரகத்தை தூக்கப் பார்த்தான். என்ன செய்தும் அசைக்க முடியவில்லை. சிறுவனைத் தண்டிக்க விபீஷணன் ஓடினான். சிறுவன் அருகிலிருந்த திருச்சி மலையில் ஏறி உச்சியில் போய் உட்கார்ந்து விட்டான், விபீஷணன் அவரைப் பிடித்து அவர் தலையில் குட்டினான். பின்னர்தான் அவர் விநாயகர் என்று தெரிந்தது. இந்தப் பிள்ளையாரே மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையாராக இருந்து அருள் பாலிக்கிறார்.

திருவரங்க நாதனை காவேரிக் கரையில் இருக்கச் செய்த பெருமை விநாயகரையே சேரும்.

## ராவணனிடம் குட்டுப்பட்டார்

ராவணன் சிவபெருமானைக் குறித்து தவம் செய்து அவரிடமிருந்து ஒரு சிவலிங்கத்தைப் பெற்று எடுத்துக் கொண்டு வந்தான். இவனும் காலைக் கடன்களை முடிக்க எண்ணினான். அங்கு சமய சஞ்சீவியாக விநாயகர் ஒரு சிறுவன் உருவில் தோன்றினார். ''பையா இந்த சிவலிங்கத்தை கொஞ்சநேரம் கையில் வைத்திரு. கீழே வைக்கக் கூடாது'' என்றான் இராவணன்.

''எனக்கு வேறு வேலை இருக்கிறது. நீங்கள் சீக்கிரமே வந்துவிடவேண்டும்'' என்றான் அச்சிறுவன்.

இதற்கிசைந்து ராவணன் லிங்கத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

ராவணன் நீராடித் திரும்புவதற்குள் ''ராவணேஸ்வரா'' என்று மூன்று தடவை குரல் கொடுத்தான் சிறுவன். பின் லிங்கத்தை பூமியில் வைத்து விட்டான்.

ராவணன் ஓடி வந்தான். சிறுவன் ஓட ஆரம்பித்தான். முதலில் சிவலிங்கத்தை எடுத்துக் கொண்டபின் சிறுவனை தண்டிக்கலாம் என்று தீர்மானித்து லிங்கத்தை எடுக்க முயன்றான்.

சிவலிங்கத்தை அசைக்கக் கூட முடியவில்லை. கயிலை மலையையே அடியோடு பெயர்த்தவனால் இந்த சிவலிங்கத்தை ஒரு சிறிதும் அசைக்க முடியவில்லை. சரி இந்த லிங்கம் இப்படியே இருக்கட்டும் என்று சிறுவனைத் துரத்திச் சென்று தலையில் ஓங்கிக் குட்டினான். அவர் கணபதி என்று அறிந்து தன்னை மன்னிக்கும்படி பிரார்த்தித்தான். இது முதல்தான் பிள்ளையாருக்காக நாம் குட்டிக் கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது.

இது நடந்த தலம் கோகர்ணம் என்ற புண்ணியசேத்திரம். கோகர்ணம் என்றால் பசுவின் காது. ராவணன் லிங்கத்தை அசைத்து தூக்க முயன்றபோது லிங்கம் பசுவின் காது போல நீண்டதாம். இக்கோகர்ணத்தையே மகாபலேஸ்வரம் என்றும் கூறுகிறார்கள். ராவணனுடைய பலத்தையும் சோதித்து அடக்கிய மகா பலம் இந்த சிவலிங்கத்தினிடம் காணப்படுகிறதல்லவா?

## தமிழகத்துக்குக் காவரி தந்தவர்

அகஸ்தியர் என்பவர் ஒரு முனிவர். பார்க்க சிறு உருவம். ஆனால் பெரும் சக்தி உள்ளவர். இல்லாவிடில் சிவபெருமான் அவர் திருமணத்திற்கு வந்த பெரும் கூட்டம் காரணமாக இந்த நாட்டின் வடபகுதி தாழ்ந்து தென் பகுதி தூக்கிய போது நாட்டின் நிலையை சமப்படுத்த இவர் ஒருவரை மட்டும் தென் கோடிக்கு அனுப்புவாரா?

இந்த அகஸ்தியர் கையில் கமண்டலத்துடன் குடகு மலை வழியாக வந்து கொண்டிருந்தார். அந்த கமண்டலத்தை ஒரு சிறுவனிடம் கொடுத்து ''கொஞ்ச நேரம் வைத்துக் கொண்டிரு, இதோ வருகிறேன்'' என்று போனார். சிறுவன் அதைக் கீழே வைத்துவிட்டு போய்விட்டான். அகஸ்தியர் திரும்பி வரும் போது கமண்டலம் கீழே இருந்தது. பையன் காணப்படவில்லை. அக்கமண்டலத்தை அவர்



காவிரி தோன்றுதல்

சமீபிப்பதற்குள் ஒரு காக்கை அதன் மீது உட்கார்ந்தது. சுத்தமான நீரை அது அசுத்தம் செய்து விடக் கூடாதே என்று அவர் அதை விரட்டினார். காகம் பறந்து விட்டது. போகிற போக்கில் அது கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டது. அக்கமண்டல நீரே காவிரியாயிற்று. காக்கையாக வந்தவர் கணபதியேதான். இக்காவிரியால் தான் ''சோழ நாடுசோறுடைத்து'' என்ற பெயர் ஏற்பட்டது.

## பாரதம் எழுதிய கணபதி

பாரதத்தை எழுதியவர் வேத வியாசர். சகல வேத சாரத்தையும் ஒரே இடத்தில் வைத்து ஒரு நூல் எழுத இவர் விரும்பினார். ஒன்றே கால் லட்சம் சுலோகங்கள் கொண்டது. இதை எப்படி அமைப்பது என்பதை யோசிக்கவே அவருக்கு மூன்று ஆண்டுகள் ஆயின. தான் சொல்லிக் கொண்டே வர ஒருவர் எழுத வேண்டுமே.

கணபதியைப் பிரார்த்தித்து அவரை எழுதும்படிக் கோரினார். கணபதி ஒப்புக்கொண்டாரேயொழிய ஒரு நிபந்தனை போட்டார். ஓயாமல் நடுவில் நிறுத்தாமல் சொல்லிவர வேண்டும். நடுவில் நிறுத்தினால் நான் தொடர்ந்து எழுத மாட்டேன்'' என்றார். வியாசர் ஒப்புக் கொண்டார்.

வியாசர் ஒரு யுக்தி செய்தார். நடு நடுவில் மிகக் கடினமான சுலோகங்களைப்புகுத்தினார். இதற்கு ''கிரந்தி'' என்று பெயர். இக்கடினமான சுலோகங்களுக்குப் பொருள் தெரிந்து விநாயகர் எழுதுவதற்குள் வியாசர் மற்றசுலோகங்களை நினைவு படுத்திக் கொள்வார்.

இந்த ஒரு நூலைக் கற்றால் போதும், ஹிந்து மதத்திற்கு வேண்டிய சகல நூல்களையும் கற்றதாகும்.

இதைப் பாரதம் பாடிய வில்லிப்புத்தூரார் தன் நூலுக்குத் துதிப்பாட்டாக அமைத்திருக்கிறார்.

## ஔவைக்குக் கைலாசம்

சிவன் கோவில்களில் 63 நாயன்மார்கள் பார்த்திருப்பீர்களே! அவர்களில் ஒருவர் சேரமான் பெருமாள் நாயனார். அவரும் நான்கு சமய குரவர்களில் ஒருவரான சுந்தர மூர்த்தி சுவாமிகளும் கைலாசம் செல்ல விரும்பினர்.

சேரமான் குதிரையில் ஏறிக் கொண்டார். சுந்தரமூர்த்தி வெள்ளை யானையின் மேல் ஏறிப் புறப்பட்டார். ஔவைப் பாட்டிக்கு இந்தச் செய்தி கிடைத்தது. தானும் போக வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அவளோ வயதானவள். கணபதி பூஜை செய்தாள். ஆனால் கைலாசம் போக வேண்டும் என்ற நினைப்பில் அவசரமாக பூஜித்தாள். பிள்ளையார் கேட்டார் ''ஏன் அவசரம்'' என்று. ஔவை 'அவர்கள் குதிரை மீதும் யானை மீதும் போய்விட்டார்களே, நான் எப்படி போவேன்?' என்றாள்.

''அவசரமாக பூஜை செய்தால் கைலைக்கு போய்விட முடியுமா?''

முடியாதே.

"பின் நிதானமாக பூஜை செய். அவர்களுக்கு முன்னதாக உன்னை கைலையில் சேர்க்கிறேன்''.

ஔவை அமைதியாக கணபதியை பூஜித்தாள். பூஜை முடிந்ததும் ஔவையைத் தன் துதிக்கையால் 'அலாக்'காகத் தூக்கி கைலையில் சேர்த்துவிட்டார் கணபதி. முன்னதாக புறப்பட்ட சேரமானும் சுந்தரமூர்த்தியும் பின்னரே வந்து சேர்ந்தனர்.

''குதிரையும் காதம் கிழவியும் காதம்'' என்ற பாடல் உண்டு. முன்னே புறப்பட்டவர்களுடன் ஔவையும் போய்ச் சேர்ந்தாள் என்பதை இதில் பார்க்கிறோம்.

## ஆசிரியர் விநாயகர்

கணபதி ஆசிரியர் பணியையும் செய்திருக்கிறார். சிதம்பரத்திற்கருகே திருநாரையூர் என்று ஒரு தலம் உள்ளது. அந்த தலப் பிள்ளையாருக்குப் பொல்லாப் பிள்ளையார் என்று பெயர். பொல்லாப் பிள்ளையார் உளியினால் செதுக்கப்படாத (பொளியாத) பிள்ளையார். ஆகவே, அப்பெயர் ஏற்பட்டது.

திருநாரையூரில் இப்பொல்லாப் பிள்ளையாரை அர்ச்சித்து வந்த சிவாசாரியார் ஒரு வேலையின் பொருட்டு வெளியூர் செல்லவே தன் மகன் நம்பியாண்டானை பூஜை செய்து வரும்படி அவன் தாய் அனுப்புகிறாள்.

பூஜை முடிந்து நிவேதனம் செய்தான் அச்சிறுவன். பிள்ளையார் நிவேதனம் செய்த அன்னத்தை சாப்பிடவில்லை. தன் பூஜையில் தான் ஏதோ தவறு; அதனால்தான் இந்த பிள்ளையார் சாப்பிடவில்லை என்று எண்ணி தன் தலையை சுவரில் மோதிக்கொள்ள ஆயத்தமானான்.

பிள்ளையார் அச்சிறுவனைத் தடுத்து நிவேதனம் செய்த பொருள்களை உண்டு தானே அவனுக்கு வேத சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்தார்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவர்கள் மூவரும் பாடிய பாடல்கள் தேவாரம் எனப்படும்.

இவைகள் சுவடிகளில் எழுதப்பட்டு சிதம்பரம் கோவில் அறையில் கிடந்தன. நம்பியாண்டார் நம்பிக்கு அந்த சுவடிகள் இருக்கும் இடத்தைக் காட்டி அதை வெளிப் படுத்தியவர் இந்தப் பொல்லாப் பிள்ளையார் தான்.

## எத்துநூல் எண்ணாயிரம் பவுன்

ஒரு அரசன் பிரும்மாண்டமான ஆலயம் கட்டுகிறான். அதன் முழு பொறுப்பையும் தன் மந்திரி ஒருவருடைய பொறுப்பில் விடுகிறான். அவர் தெய்வ பக்தர். இவர் கணக்குகளை சரியாக வைக்காமல் அசிரத்தையாக இருந்து விடுகிறார்.

ஒருநாள் அரசன் கட்டி முடித்த கோவிலைப் பார்த்து மிகவும் பாராட்டினான். மந்திரிக்கு ஆள் அனுப்பி கணக்குகளை எடுத்துவரச் சொன்னான்.

கணக்கு வைக்காத மெய்யடியார் தவித்துப் போனார். கோவில் கைங்கரியம் என்றாலும் கணக்கு வைக்காதது தவறுதானே? பூஜை அறையில் விநாயகரைத் தியானித்து மெய்ம்மறந்து இருந்தார்.

சபையில் மந்திரி வருகையை எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர்.

ஒரு அழகிய இளைஞன் மந்திரி அனுப்பியதாக சொல்லிக் கொண்டு கணக்கு ஏடுகளுடன் அங்கு வந்தான்.

**விநாயகர், யானையாகவந்து வள்ளியை வெருட்டுதல்**



''அடியேன் அமைச்சரது கணக்குப்பிள்ளை. அவர் சொற்படி கணக்குகளைக் கொண்டு வந்திருக்கிறேன் அவர் பல்லக்கில் வந்து கொண்டிருக்கிறார்'' என்றான் அக்கணக்குப் பிள்ளை.

அரசன் அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு ''சரி. கணக்கைப்படி'' என்றான். மிகவும் வணக்கத்துடன் கூடிய இனிய குரலில் முதலில் சொல்ல வேண்டிய மங்கல வாசகங்கள் சிலவற்றைச் சொல்லி சற்று நிறுத்தி ''எத்து நூல் எண்ணாயிரம் பவுன்'' என்றான்.

அரசன் இதைக் கேட்டதும் திகைத்துப் போனான். செங்கற்கள் அளவாக அமைந்திருக்கிறதா என்று பார்க்க உபயோகிக்கும் சாதா நூலே எத்து நூல், அதுவே எண்ணாயிரம் பவுன் என்றால் இந்த கோவில் கட்ட எவ்வளவு ஆகியிருக்கும்? போதும் சுவடியை கட்டலாம், என்றான் அரசன். கணக்குப் பிள்ளையும் சுவடியைக் கட்டினார்.

கணக்குப் பிள்ளை புறப்படவும் மந்திரி வேகமாக உள்ளே வரவும் சரியாக இருந்தது. அரசனுக்குப் புரிந்து விட்டது வந்தது யார் என்று. அவர் சாட்சாத் கணபதி தான்.

## நீங்களும் வழிபடலாம்

பிள்ளையாரை மிக எளிமையாக வழிபடலாம். பெரியவர்கள் தான் வழிபட வேண்டும் என்பதில்லை குழந்தைகள் அவரை வழிபடலாம். அவர் எங்கும் இருப்பார். அவரை பூஜிக்க எருக்கம் பூவும் அருகம் புல்லும் போதும். இவை எங்கும் கிடைக்கும். இத்தகைய எளியக் கருணைக் கடவுள் விநாயகரைத் தவிர வேறு இல்லை.

இவர் உருவம் இல்லையே என்று கவலைப்பட வேண்டாம். பிடித்துவைத்தால் அது பிள்ளையார். மஞ்சள் பொடியைப் பிடித்து வைத்து வீட்டில் பூஜை செய்வதை நீங்கள் பார்த்திருக்கலாமே.

## அயல்நாடுகளிலும் வழிபாடு

நம் நாட்டில் மட்டும்தான் கணபதி வழிபாடு இருக்கிறது என்பதில்லை. அயல் நாடுகளிலும் அவரை வழிபடுகிறார்கள்.


தமிழர்கள் பண்டைக் காலத்திலேயே கப்பலில் பிரயாணம் செய்து கடல் கடந்து சென்று பிற நாடுகளுடன் வியாபாரம் செய்து வந்தனர். அவர்கள் தங்களுடன் தாங்கள் வழிபடும் பிள்ளையாரையும் கொண்டு சென்று பிற நாடுகளில் பிரபலமாக்கி யுள்ளனர்.

புத்தர்களும் கணபதியை வழிபட்டதால் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று புத்த மதத்தை பரப்பியபோது அவர்கள் மூலமாகவும் கணபதி வழிபாடு பிறநாடுகளில் பரவியது.

முக்கியமாக சீனா மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஜாவா, சுமித்திரா, போர்னியோ, பர்மா, மலேசியா ஆகிய நாடுகளில் கணபதி வழிபாடு பரவி வருகிறது.

நேபாளத்தில் பஞ்ச கணேசர் ஆலயம் மிக பிரசித்தம். இங்கு ஐந்து கணபதிகள் வழிபடப்படுகின்றனர்.

திபேத்தின் ஆலயங்களில் இரண்டு துவார பாலகர்களில் ஒருவராக கணபதி காணப்படுகிறார்.



பர்மாவில் கணபதிக்கு 'மகா பைனி' என்று பெயர். புத்தகத்தைத் தூக்கும் கடவுளாக இந்த பைனி விளங்குகிறார்.

சயாமில் கணபதிக்கு ஆமை வாகனம்.

கம்போடியாவில் கணபதிக்கு பிரஹ கணேஷ் என்று பெயர்.

சீனாவில் சதுர் முக (நான்கு முக) கணபதி பிரசித்தம்.

ஜாவா கணபதிக்கு தொந்தி வயிறு இல்லை. ஒட்டிய வயிறு, ஐப்பானில் கணபதிக்கு ஷோடென என்று பெயர். சுகம் தரும் கடவுளாக இவர் கருதப்படுகிறார்.

ஒன்றையொன்று தழுவும் இரட்டை விநாயகர் ஜப்பானில் பிரசித்தம்.

ஆப்கானிஸ்தான் ஆலயங்களில் கணபதி நின்ற நிலையில் காட்சி தருகிறார்.

அமெரிக்கா நியூயார்க் பகுதியில் கணபதிக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோ நாட்டில் கணபதி அறுவடை காலக் கடவுளாக வழிப்படப்படுகிறார்.

ரோமில் கணபதிக்கு யானை முகமில்லை. ஆனால் இரு மனித முகங்கள். நாம் எப்படி கணபதியை வணங்கிவிட்டு தான் மறு காரியம் ஆரம்பிக்கிறோமோ அதுபோல ரோமர்களும் இந்த ஜேனஸ் கடவுளை வணங்கிவிட்டே மறுகாரியம் ஆரம்பிக்கிறார்கள். எப்படி நம் நாட்டில் எல்லா இடங்களிலும் கணபதி இடம் பெற்றிருக்கிறாரோ அது மாதிரி ரோமில் எல்லா பட்டி தொட்டிகளிலும் ஜேனஸ் காணப்படுகிறார்.

## விநாயக வழிபாட்டின் தத்துவம்

இந்த கணபதி வழிபாட்டின் அர்த்தம் என்ன? விநாயகர் போலவே நாமும் விளங்க வேண்டும் என்பதே.

யானை அறிவிற் சிறந்த பிராணி, யானைகளின் வாழ்க்கையில் சிறந்த கட்டுப்பாடு உண்டு. பல யானைகள் ஒன்று சேர்ந்து ஒரே குடும்பமாக, ஒரு மூத்த யானையின் தலைமையை ஏற்று நடக்கும்.

குடும்பத்துடன் வாழும் நமக்கு யானை நல்ல படிப்பினை.

பெரிய தலை, அபார சிந்தனா சக்தி அதே போல் குழந்தைகளாகிய நீங்களும் படித்த விஷயங்களையும் கேட்ட விஷயங்களையும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பெரிய காது— கேட்பதின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. கற்றலின் கேட்டலே நன்று என்று சொல்வார்கள்.

சிறிய கண்கள்— வரம் கேட்பவனைக் கூர்ந்து கவனிக்காமல் வரம் அருளும் தன்மை.

பெரிய வயிறு—வயிறு நிறைந்தவர் யாருக்கும் தீங்கிழைக்க மாட்டார் என்று சொல்வதுண்டு.

எதையுமே தவறாக எடுத்துக் கொள்ளாத ஆனந்த நிலையில் இருப்பவர் கணபதி.

அவர் பூஜை மிக எளிது. அதுபோல நமது வாழ்க்கையும் மிக எளிதாக அமைய வேண்டும்.

இத்தகைய கணபதி உங்கள் எல்லோருக்குமே அருள்வாராக.

—卐卐—




உ

# கோயம்பேடு குசலபுரீஸ்வரர் ஆலயம்

K. R. நந்தகோபால்
தக்கார்,
அருள்மிகு குசலபுரீஸ்வரர் ஆலயம், சென்னை.

வால்மீகி ஆசிரமத்தில் பிறந்த லவ-குசலர்கள் அவரிடமே சகல கல்வி வித்தைகளையும் கற்று தேர்ச்சிபெற்று வளர்ந்துவந்தனர். ஒரு நாள் இருவரும் ஒரு பாதை வழியே நடந்து செல்லும்போது, காலில் ஏதோ தடைப்பட்டு, குனிந்து பார்க்க, பூமியிலிருந்து ரத்தம் கசிந்து ஓட ஆரம்பித்தது. இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட அவர்கள், பூமியின் அடியில் சிறிது தோண்டிப் பார்க்க, அங்கு ஒரு சிவலிங்கம் இருக்கக் கண்டனர். உடனே அதைப் பெயர்த்து எடுத்து, ஆசிரமத்திற்குப் பக்கத்தில் கொண்டு வந்து, சகல மரியாதைகளுடன் தினசரி அதை பூஜித்து வரலாயினர்.


இப்படி குசலவர்களால் பூஜிக்கப்பட்டவரே குசலபுரிஸ்வரர். அவர் இருப்பிடம்தான், குசலவபுரி என்று வழங்கி வந்தது. இந்த குசலவபுரிக்கே நாம் இன்று செல்கிறோம். இந்த இடம் எங்கிருக்



அருள்மிகு குறுங்காலீசுவரர்

கிறது என்று தெரிந்துகொள்ள பூகோளத்தையோ அல்லது ரயில் கால அட்டவணையையோ புரட்டிப் பார்த்தால் நாம் நிச்சயம் ஏமாந்து போக வேண்டும். ஏனெனில் குசலபுரி என்ற பெயர் நாளடைவில் மறைந்து, அந்த இடமே இன்று கோயம்பேடு என்று வழங்கி வருகிறது.

சென்னையில் வீடு கட்டுபவர்களாயிருந்தால் இந்த ஊரைப்பற்றி கேள்விப்படாமலிருக்க முடியாது. அல்லது ஒரு தடவையாவது அந்த ஊருக்குப் போய்வராமல் இருந்திருக்க முடியாது. ஏனென்றால் சென்னை நகரில் கட்டப்படும் எல்லா கட்டி




அருள்மிகு அறம் வளர்த்த அம்மையார்

டங்களுக்கும் வேண்டிய செங்கற்கள் இந்தப் பக்கங்களிலிருந்தே வந்து சேரவேண்டும். இந்தப் பக்கங்களில் செங்கற்சூளைகள் அதிகம்.

சென்னையிலிருந்து பூவிருந்தவல்லிக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறி ஒரு ரூபாய் டிக்கட்டு வாங்கினால் கோயம்பேடு என்ற ஊரை வந்து அடையலாம். பஸ்ஸைவிட்டு இறங்கியதும், இடதுபுறம் திரும்பிப் பார்த்தால் ஒரு கோயில் நம்மை நோக்கித் தெரியும். நூறு மீட்டர் தூரம் நடந்தால், அங்குள்ள சிவன் கோயிலை அடையலாம். கோயில் வடக்கு நோக்கியிருப்பது குறிப்பிடவேண்டும்.

கோயில் கோபுரம் மிகச் சிறியதுதான். இதை தாண்டிச் சென்றால், உட்பிரகாரத்திற்கு வந்து சேரலாம். நாம் சுற்று முற்றும் பார்ப்பதிலிருந்தே, நாம் கோயிலைப் பார்க்கத்தான் வந்திருக்கிறோம் என்பது அர்ச்சகருக்குத் தெரிந்து நம்மை எதிர் கொண்டு வரவேற்பார் அர்ச்சகர். பிரகாரத்தின்




பஞ்சவர்ண நூதன நவக்கிரகம்

வடகிழக்கு மூலையில் உயரமான நான்கு தூண்களுடன் கூடிய மண்டபத்தின் மேல் பாகத்தைச் சுட்டிக்காட்டி, 'இந்த மண்டபத்தின் நான்கு மூலைகளிலும் தொங்கும் பெரிய வளையங்களையும் பார்த்தீர்களா? அவை கருங்கல்லிலேயே செதுக்கப்பட்டவை. அவையும் அவைகளை கோர்த்திருக்கும் நான்கு காதுகளும் அப்படியே செதுக்கப்பட்டவை. தனித்தனியாக செய்து கோர்க்கப்பட்டவையல்ல. இவை சிற்பியின் கைத்திறனை விளக்குகிறது. இம் மாதிரி வேலை வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால், இது மிகவும் குறிப்பிடத் தக்க வேலைப்பாடாகும்'' என்று விளக்கம் தருவார் அர்ச்சகர்.

இதையும் தாண்டிச் சென்றால், சன்னதியின் முன் மண்டபத்துக்கு வந்து சேருகிறோம். நம்மை எதிர்நோக்கிடும் அந்த மண்டபத்தை, நான்கு தூண்கள் தாங்கி நிற்கும். அர்ச்சகர் நமக்குக் குறிப்பிட்டு சொல்லாமலேயே, அந்தத் தூண்களிலுள்ள சிற்ப வேலைப்பாடு புலப்படும். ஒவ்வொரு தூணிலும் ஒரு குதிரை, பின் கால் கீழே ஊன்றியும், முன்கால்கள் மிக உயரத்தில் எழும்பி பாய்ச்சலில் நிற்கிறது. அதன்மீது ஒரு பாலகன் உட்கார்ந்துகொண்டு கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறான். மற்றொரு பாலகன், குதிரையின் கழுத்துக்குக் கீழே நின்று, அதன் கடிவாளத்தை ஒரு கையில் பிடித்துக் கொண்டிருக்கிறான். இந்த சிற்ப வேலையை ரசித்துக் கொண்டிருக்கும்போது அர்ச்சகர் கூறுவார் 'அஸ்வமேத யாகம் செய்து ராமரால் விடப்பட்ட குதிரை இது. இந்தப் பாலகர்கள் தான் லவ-குசர்கள். குதிரையை அடக்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். இதைத்தான் சிற்பி இந்த நான்கு தூண்களிலும் நமக்கு காட்டுகிறான்.

அடுத்து நாம் பார்க்கவேண்டியது மூல ஸ்தானத்திலுள்ள குசலவபுரீஸ்வரர்தான். சாதாரணமாக மற்ற சிவன்கோயில்களில் மூலவருக்கு, தீபாரதனை செய்யும்போது அர்ச்சகர், சற்று மட்டும் கீழே குனியக் காண்கிறோம். ஆனால் அவர் இங்கு முழங்காலுக்குக் கீழே குனிந்துதான் அர்ச்சனை செய்யவேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் லிங்கத்தின் பீடமும், மேல்பாகமும், மற்ற இடங்களைவிட, மிகக் குட்டையாக இருப்பதால் தான். ''குறுங்காலீஸ்வரர்'' என்று மற்றொரு பெயர்



பிரதோசத்தின் போது நடைபெறும் வழிபாடு

இவருக்கு வழங்கி வருவதன் காரணம் இப்போதல்லவா நமக்கு விளங்குகிறது.

இத்திருக்கோயிலின் சிறப்பை விளக்கும் வகையில் ஒரு பாடல் கர்ண பரம்பரையாகக் கூறப்படுகிறது.

வடக்குப் பார்த்த சுவாமியுமில்லை
மடக்குப் போல லிங்கமும் இல்லை
குறுங்காலீசுவரர் என்ற பேரும் இல்லை
கோயம்பேடு என்ற ஊருமில்லை.

கர்ப்பக்கிருகத்தைச் சுற்றிப் பிரகாரத்தில் துர்க்கை, சரஸ்வதி, லட்சுமி முதலியவர்களைத் தரிசித்துக் கொண்டு, அம்பிகை சந்நிதிக்குச் செல்வோம். மற்றெல்லாக் கோவில்களிலும் மூலக்கோயிலுக்கு இடது புறம்தான் அம்பிகை தனிக்கோயில் கொண்டிருக்கக் காண்கிறோம். இதற்கு மாறாக, இங்கு வலதுபுறத்தில்தான் அம்பிகை தர்ம சம்வர்த்தனி அமர்ந்திருக்கிறாள். அறம் வளர்த்தநாயகி என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதே பெய



ஸ்ரீ பார்வதி சுயம்வர விருட்சம்

ருள்ள அம்பிகையை வேறெங்காவது தரிசிக்க பிரியப்பட்டால், திரிபுவனத்திலுள்ள அறம் வளர்த்த நாயகியைத்தான் சென்று பார்க்கவேண்டும். அம்பிகையை எதிர்நோக்கி பலிபீடத்தில் காணப்படும் சிங்கத்தை செப்பனிட்ட சிற்பி தன் கைத்திறனை அதன் பிடரி மயிரில் காண்பித்திருக்கிறான். இந்த இடத்தின் மேல்தளத்தில் பல திருவுருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவை எல்லாம் ஒரே கல்லால் ஆனவை என்பதை அர்ச்சகர் எடுத்துக்கூற மறக்க மாட்டார்.

கர்ப்பக் கிருகத்தைச் சுற்றி கோஷ்டங்களில், விக்கிரகங்கள், அவரவர்கள் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் இருக்கிறார்கள். மூலவரும் கோயிலும் வடக்குப் பார்த்திருப்பதனால், குல்லாய்க்குத் தகுந்த தலைமாதிரி, இவர்களும் இடம் மாறி விடவில்லை. கர்ப்பக்கிருகத்தைச் சுற்றியுள்ள தூண்களில் ,பல திருவுருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.


சிவன் கோயிலைவிட்டு வெளியே வருவதற்கு முன்பு பக்கத்திலிருக்கும் பெருமாள் கோயிலுக்குச் சென்று அங்குள்ள வால்மீகியையும் தரிசித்துச் செல்லும்படி அர்ச்சகர் கூறியதும்தான், ஆஸ்ரமத்துடன் மட்டுமல்ல கோயிலிலும் இடம் பெற்று



பிரதோசத்தின் போது நடைபெறும்
சந்தியா நடனம்

விட்டார் வால்மீகி என்பது நமக்குத் தெரியவரும். சாதாரணமாக எல்லா இடங்களிலும் சிவ,விஷ்ணு கோயில்கள் தனித்து ஒன்றையொன்று எதிர்நோக்கியே அமைந்திருப்பதைக் காண்கிறோம். ஆனால் இங்கு இவை இரண்டும் பக்கத்திலேயே அமைந்திருக்கின்றன. சிவன்கோயில் வடக்கு நோக்கியும் விஷ்ணு சந்நிதி கிழக்கு நோக்கியும் காணப்படுகின்றன. தவிர, இரு கோயில்களுக்கும் பொதுவாகவே நேர்எதிரில் ஒரே புஷ்கரணியைத்தான் நாம் காணலாம். இதுவும் மற்றொரு விசேஷமாகும். சிவன், விஷ்ணு - நாங்கள் இருவரும் ஒருவர்தான் எங்களுக்குள் யாதொரு அபிப்பிராய பேதமோ வித்தியாசமோ கிடையாது. ஆதலால் அனாவசியமான சிவா-விஷ்ணு பூசல்களைக் கிளப்பிவிட்டு, நீங்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளாதீர்கள் என்று அவர்கள் நமக்கு எடுத்துக் காட்டத்தான் இவ்விதம் பக்கத்திலேயே அமர்ந்து ஒரே புஷ்கர்ணியையும் பொதுவில் பெற்றிருக்கிறார்களோ என்றுதான் நமக்கும் எண்ணத் தோன்றும்.

மூலஸ்தானத்தில் கம்பீரமாய் வீற்றிருக்கும் வைகுண்டவாசகரையும், அம்பிகை கனகவல்லி தாயாரையும் சேவித்துவிட்டு, வெளியே வந்தால்




தென்காசி அருள்மிகு விசுவநாதர் ஆலயத் திருக்கோபுர மூன்றாம் நிலைக் கட்டுமானப் பணித் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது. திருப்பணியைத் தொடங்கிவைத்த மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர். எம். வீ. அவர்கள், திருப்பணிக் குழுவின் தலைவர் திரு சிவந்தி ஆதித்தன் அவர்களுக்குப் பொன்னாடை அணிவிக்கிறார்.

சந்நிதிக்குப் பக்கத்தில் இடதுபுறம் சிலர் நமக்குத் தரிசனம் கொடுக்கின்றனர். அவர்களுள் முதல் இடம் பெறுவது, செப்புச் சிலை வடிவிலுள்ள விக்ரசரிஷியாகும். வைகுண்டவாசர் இவரால் ஆராதிக்கப்பட்டு வந்ததாக பட்டாச்சாரி கூறுவார். அடுத்துக் காண்பது ராமர், சீதை செப்புச் சிலைகள். மற்றொரு இடத்தில், சீதையைக் கல் வடிவத்திலும் காணலாம்.

இவ்வூர் வால்மீகி இருந்த இடமாயிற்றே அவர் இல்லாதிருந்தால் லவ-குசர்கள்தான் கல்வி கற்று, சகல வித்தைகளிலும் வல்லுநர்களாகி அஸ்வமேதயாகக் குதிரையை கட்டிப் பிடித்திருக்க முடியுமா? இதனால்தான் வால்மீகியின் சிலையில் இரு பக்கங்களிலும் லவ குசர்கள் இருவரும் ஆளுக்கொரு பக்கமாக இடம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். மூவரையும் ஒரே விக்கிரகமாகச் செப்பனிட்டிருக்கிறான் சிற்பி. பக்கத்திலுள்ள ஆழ்வார்களையும் தரிசித்துவிட்டு நாம் ஊருக்குத் திரும்பலாம்.

***




ஆலயத் திருக்குளம்

# நவராத்திரி

T.S. குப்பண்ண சாஸ்திரிகள் M.A. L.T.,

சென்னை

நவராத்திரி என்னும் சொல்லுக்கு ஒன்பது நாட்களில் செய்யப்பெறும் நோன்பு அல்லது உற்சவம் என்று பொருள். உற்சவம் முடியும் பத்தாம் நாளையும் கணக்கிட்டு வடநாட்டார் இதைத் தசராவென வழங்குவர். இது ஆச்வின மாதத்தின் (அதாவது புரட்டாசியில் அல்லது அதற்கு முன் வரும்) சுக்கில பட்சப்பிரதமையில் தொடங்கித் தசமியில் முடிவுறும். இதில் வரும் அஷ்டமிக்கு மகாஷ்டமி என்றும், நவமிக்கு மகா நவமியென்றும் பெயர். ஆகையால் சிலர் இதை மகாநோன்பு அல்லது மகர் நோன்பு என்று சொல்லிக் கொண்டாடுவர். சரத் கால சம்பந்தம் பெற்ற ஆச்வின மாதத்தில் இது வருவதால் இதற்குச்சாரத நவராத்திரம் என்று பெயர் வழங்கும். இதுதான் பிரசித்தமானதும் யாவராலும் கொண்டாடப் பெறுவதுமாகும். இதேபோல் வசந்த நவராத்திரம் என்ற உற்சவமும் உண்டு. இது வசந்த இருது சம்பந்தமுள்ள சைத்திர (சித்திரை அல்லது அதற்கு முன்வரும்) சுக்கிலப் பிரதமையிலிருந்து தொடங்கி தசமியில் முடிவுறும். இது தேவி உபாசகரால் மட்டும் கொண்டாடப் பெறும். துர்க்காதேவியைச் சாரத நவராத்திரத்தில் சண்டிகா என்ற தன்மையிலும், வசந்த நவராத்திரத்தில் ரக்த தந்திகா என்ற தன்மையிலும் பூசிக்க வேண்டுமென்பது விதி. இவைபோல் மாக (மாசி) மாதத்திலும் ஒரு நவராத்திர பூசை சொல்லப் பெறுகிறது. 'சரத்து, வசந்தம் என்ற இவ்விரு இருதுக்களும் யமனுடைய கோரப்பற்கள், இக்காலங்களில் நோய்கள் மல்கி மக்கள் பெருவாரியாக நாசமடைவர். நவராத்திரி துர்க்கா பூஜை






தேவி, மகிசனை வதம் செய்தல்

இதைத் தவிர்க்கும்' என்று தேவிபுராணம் கூறும். தேவி, மகிஷன் முதலிய அசுரர்களை வென்று, ஆச்வின சுக்கிலத்தில் அபிஷேகம் செய்யப்பெற்றாள், இக்காரணத்தாலும் சாரத நவராத்திரத்தில் தேவி பூசிக்கப்பெற வேண்டுமென்பர்.

சாரத நவராத்திர பூஜை நித்தியகாவியம் என்ற விதிக்கு உட்பட்டது என்றும், இதை இந்துக்கள் யாவரும் ஒவ்வோர் ஊரிலும், ஒவ்வொரு வீட்டிலும், வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டுமென்றும் நூல்கள் கூறும். ஒன்பது நாட்களும் பூசை செய்யச் சக்தியற்றவர் சப்தமி, அஷ்டமி நவமியென்று மூன்று நாட்களிலாகிலும் பூசிக்க வேண்டும். அதாவது சப்தமியில் ஆவாகனமும், அஷ்டமியில் பூசையும், நவமியில் பலியுடன் பூசையும், தசமியில் விசர்ஜனமும் செய்ய வேண்டும்.

அஷ்டமியன்று தட்சயக்ஞ விநாசினியாக யோகினி கணங்களுடன் தேவி ஆவிர்ப்பவித்ததாக ஐதிகம். மூன்று நாட்கள் பூசை செய்ய இயலாதவர் நவமி ஒரு நாளாகிலும் செய்ய வேண்டுமென்பர். இக்கடைசி முறையைத்தான் தென்னாட்டினர் பலரும் கடைப்பிடிக்கின்றனர். இப்பூசையின் பலனாக இம்மையில் எல்லா நலன்களும், மறுமையில் வீடும் கிடைக்கும் என்பர்.

பூசை செய்பவர் பிரதமையில் எண்ணெய் முழுக்காடிப் பூசையைத் தொடங்க வேண்டும். கலசம் வைத்து யவம், கோதுமை, முதலிய தானியங்களைக் கொண்டு சுற்றிலும் பாலிகை தெளித்துக் கலசத்தில் துர்க்கையை ஆவாகனம் செய்ய வேண்டும். சங்கம், சக்கரம், கதை, பதுமம் இவற்றைக் கையில் ஏந்தி, சிங்க வாகனத்தில் அமர்ந்த சண்டியின் பிம்பத்தையோ, பதினெண் புயங்களையுடைய காளியின் பிம்பத்தையோ வைத்து, ஜயந்தி அமைத்துப் பூசிக்க வேண்டும். உளுந்தினால் செய்த திண்பண்டங்களையோ, பூசணிக்காயையோ, படைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் காலை, பகல், இரவு என்று மூன்று காலம் பூசை செய்ய வேண்டும். இவற்றுள் இரவு பூசை முக்கியம். உபவாசமிருந்தோ இரவில் ஒரு வேளை உண்டோ, பிரமசரிய விரதத்துடன் தரையில் படுத்துறங்க வேண்டும். பூசையின் அங்கமாகத் தேவி சப்தசதி என்ற தேவிமான்மிய பாராயணம் முதலிய மந்திரங்களாலோ நவாட்சர மந்திரத்தாலோ சோடசோபசாரங்களுடன் பூசை செய்ய வேண்டும். பிம்பம் இல்லாவிடில் சிவப்புத் துணியில் நவாட்சர மந்திரத்தோடு கூடிய எந்திரத்தை முதல் நாள் ஒரு தடவை, இரண்டாம் நாள் இரண்டு தடவை, இப்படி ஒன்பது நாளும் செய்ய வேண்டும். இரண்டு வயது முதல் பத்து வயது வரையிலுள்ள கன்னிகைகளை நவதுர்க்கைகளாக வைத்து, முறையே, குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, காளி, சண்டிகா, சாம்பவி, துர்க்கை, சுபத்திரை என்ற பெயர்களால் பூசித்து, அவர்களுக்கு மலர், சந்தனம், பழம், கண்ணாடி, இரவிக்கை, அடை, அறுசுவை உண்டி இவற்றை வழங்க வேண்டும். சொறி சிரங்கு நோய், அங்கக் குறைவு முதலியன உள்ள கன்னிகைகளைவிலக்க வேண்டும். நாள்தோறும் இராமலீலையை நடிப்பித்து ஒன்பதாம் நாள் இராவண வதத்துடன் முடிக்க வேண்டும். அஷ்டமியில் சண்டியோமம் செய்து, அன்று இரவு முழுதும் விழித்திருக்கவேண்டும். நவமியில், காளி, காளி என்று சொல்லிக் கொண்டு ஆடுகளையும் எருமைகளையும் பலி கொடுக்க வேண்டும். உயிர்ப்பலிக்குப் பதிலாக மாவினால் செய்த இப்பிராணிகளையோ, பூசணிக்காயையோ பலியிடலாம். இதன் பின்னர் தசமி அன்று உபவாசம் முடித்துப் பாரணை செய்ய வேண்டும் (தசமியில் பாரணை என்ற கொள்கையும் உண்டு) தசமியன்று தேவியை விசர்ஜனம்



**வலங்கைமான் அருள்மிகு மகாமாரியம்மன் ஆலயத்திற்கு உரிமையான திருமண மண்டபத்தை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர் எம்.வி. அவர்கள் திறந்து வைக்கிறார். உடன் இருப்பவர் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள்.**

செய்து சபரோற்சவம் செய்ய வேண்டும். ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் துர்க்கைக்கும், இரண்டாம் மூன்று நாட்கள் இலக்குமிக்கும், மூன்றாம் மூன்று நாட்கள் சரசுவதிக்கும் எடுத்தவை என்றும், மூல நட்சத்திரத்தில் புத்தகங்களில் சரசுவதிதேவியை ஆவாகனம் செய்து, பூராடத்தில் விசேஷ பூசை செய்து, உத்தராடம் அல்லது நவமியில் பலி கொடுத்துப் பூசித்துத் திருவோணம் அல்லது தசமியில் விசர்ஜனம் செய்ய வேண்டும் என்று விதி உண்டு.

அரசர் சேனை விருத்தியின் பொருட்டு நவராத்திரி பூசையுடன் பலநீராசனம் என்ற சடங்கையும் நடத்த வேண்டும். சுவாதி நட்சத்திரத்தில் உச்சைசிரவசு என்ற குதிரை பாற்கடலில் தோன்றியதாலும், கேட்டையில் அஷ்டதிக்குக் கயங்களும் தோன்றித்திசைகளை வகித்ததாலும், நவராத்திரியில் சேனையிலுள்ள குதிரைகளையும் யானைகளையும் பூசித்து, விஜயதசமியென்ற தசமியன்று வன்னிமரத்துடன் சகந்நாதனையும் பூசித்துப் பலநீராசனம் என்ற சடங்கை நடத்திக் கஞ்சனம் என்ற பறவையை ஜலாசயத்திற்குப் பக்கத்தில் தரிசனம் செய்து விஜயயாத்திரை செய்ய வேண்டும் என்பது விதி. பத்து நாட்களும் அரசர் பரிவாரங்களுடன் கொலுவீற்றிருப்பர்.

தென்னாட்டில் தேவியுபாசகரே இவ்விதம் விரதமிருந்து முறைப்படி பூசை செய்கின்றனர். இக்காலங்களில் இவர்கள் தினந்தோறும் செய்யும் தேவி பூசைகளை விசேஷமாக நடத்துகின்றனர். சிவாலயங்களில் அம்பிகைக்குத்தனிப் பூசைகள் நடத்திப் பிரதிதினம் புதுப்புது அலங்காரங்கள் செய்து, அம்பிகையைக் கொலு மண்டபத்தில் கொலு அமர்த்துகின்றனர். எல்லா உலகுக்கும் அரசியாகிய இராஜராஜேசுவரி கொலுவிருக்கையை இது குறிக்கும். பண்டை நாளில் அரசர்களும், நவராத்திரி காலத்தில் நாள்தோறும்கொலுவிருப்பர். இதை அனுசரித்து வீடுகளிலும் பெண்டிர் பொம்மைக்கொலு வைப்பர். இது ஒரு கண்காட்சியாகவும் அமையும். கன்னிகைகளை கிருஷ்ணன் முதலிய தேவதைகள் போல் அலங்கரிப்பர். பெண்டிரை அழைத்து மஞ்சள், குங்குமம், தேங்காய் முதலியன வழங்குவர். அயல் கன்னிகைகளை பூசிக்கச் சக்தியற்றவர் வீட்டுக்கன்னிகைகளுக்கு பூசை நடத்தி உபசரிப்பர். இராம லீலை நடத்த முடியாதவர் இராமாயணப் பாராயணம் செய்வர். அல்லது செய்விப்பர். நவமியன்று சுவடிகளில் சரசுவதிதேவியை ஆவாகனம் செய்து பூசித்து, விஜயதசமியன்று விசர்ஜனம் செய்து பாடம் தொடங்குவர். நவமியன்று தொழிலாளர் தத்தம் தொழிற் கருவிகளை வைத்து ஆயுத பூசை செய்வர். குழந்தைகளைப் புதிதாகப் பள்ளியில் சேர்க்க விஜயதசமி சிறந்த நன்னாளாகலின், அன்று விசேஷமாக அட்சராப்பியாசங்கள் நடக்கும்.

நன்றி: தமிழ்க் கலைக் களஞ்சியம்

# எண் வகை யோகம்


டாக்டர் பொற்கோ
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600005.

(முன் தொடர்ச்சி)

ஆசனங்களைப் பற்றி விளக்கமாகத் தெரிந்து கொண்டு முழுமையாக அதில் அக்கறை காட்டுவது ஒரு தனிக்கலை. ஆசனங்களைப் பற்றி மட்டுமே ஆராய்வது நம்முடைய நோக்கமல்ல. நாம் முன்பே குறிப்பிட்டது போல எல்லோரும் பயிலத்தக்க ஒரு சில ஆசனங்களைப் பற்றி மட்டுமே இங்கே நாம் விளக்குகிறோம்.

பதுமாசனம், சர்வாங்காசனம் ஆகிய இரண்டு ஆசனங்களைப் பற்றி மட்டும் முன்பு பார்த்தோம். மேலும் சில ஆசனங்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

3. புயங்காசனம்: இரு கைகளையும் இடுப்போடு சேர்த்தபடி குப்புறப்படுக்கவும். கால்களை நேராக நீட்டிக் கொள்ளவும். இரண்டு கைகளை



யும் தோள்பட்டைகளுக்கு நேரே கொண்டு வரவும். கை விரல்களை விரித்த நிலையில் உள்ளங் கைகளைப் பூமியில் பதிய வைத்து மெதுவாகத் தலையை உயர்த்தவும். இடுப்புக்கு மேல் உள்ள உடல் பகுதியை மெல்ல மேல்ல மேலே உயர்த்தவும். இரு கைகளாலும் பூமியை அழுத்தியபடி உடலை மேலே உயர்த்தவும். இடுப்புக்குக் கீழே உள்ள உடலின் பகுதி தரையின் மீது பொருந்தியிருக்க வேண்டும். இப்படி நிமிரும்போது ஒரு சிறிதும் முரட்டுத்தனம் கூடாது. எவ்வளவு நேரம் இந்த நிலையில் இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் இந்த நிலையில் இருக்கவும். முன்பு மேலே உடலைப் படிப்படியாக உயர்த்தியது போலவே மெதுவாக உடலைக் கீழே குப்புறப்படுத்தநிலைக்கு வரவும். உங்கள் விருப்பத்திற்கேற்ப இதனை இரண்டு அல்லது மூன்று முறை கூடச் செய்யலாம். புயங்களைக் கருவியாகக் கொண்டு அமையும் இந்த ஆசனத்தைப் புயங்காசனம் என்று கூறுகின்றனர்.

4. சலபாசனம்: முன்னைய ஆசனத்தைத் தொடங்கியபோது இருந்தது போலவே குப்புறப் படுக்கவும். இரு கைகளையும் உடலை ஒட்டியபடியே நீட்டிக் கொள்ளவும். முகம், மார்பு, இடுப்பு ஆகியவற்றைப் பூமியை நோக்கி நன்கு பதித்துக் கொள்ளவும். இடுப்புக்குக் கீழேயுள்ள பகுதியைப் படிப்படியாக முடிந்தவரை மேலே உயர்த்தவும். கைகள் இரண்டும் நீட்டியபடி இருக்க வேண்டும். கால்களை வளைக்காமல் நேரே உயர்த்த வேண்டும். புயங்காசனத்தில் இடுப்புக்கு மேலே உள்ள பகுதியை மேலே உயர்த்தினோம். சலபாசனத்தில் இடுப்புக்குக் கீழேயுள்ள பகுதியை மேலே உயர்த்த வேண்டும்.

எவ்வளவு நேரம் கால்களை உயர்த்திய நிலையிலேயே இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் இருக்லாம். கால்களை இறக்கும்போது படிப்படியாக மெதுவாக இறக்க வேண்டும். தொடக்கத்தில் படுத்திருந்த அதே நிலைக்கு வரவும். கால்களை உயர்த்தும்போதும் இறக்கும்போதும் முகமும் மார்பும் நன்கு தரையில் பொருந்தியிருக்கவேண்டும்.

5. தனுராசனம்: முன்னைய ஆசனங்களுக்குச் சொன்னது போலவே முதலில் குப்புறப்படுத்துக் கொள்ளவும். கால்களைச் சற்று வளைத்த நிலையில் மேலே உயர்த்தவும். வலது கணுக்காலை வலது கையாலும் இடது கணுக்காலை இடது கையாலும் நன்கு பற்றிப் பிடித்துக் கொள்ளவும். இடுப்புப் பகுதி மட்டும் பூமியில் நன்கு பதிந்திருக்கட்டும். தலையை நன்கு நிமிர்த்திக் கொண்டு உடலை உயர்த்தவும். உடலை வில்போல வளைக்கும் இந்தப் பயிற்சிக்குத் தனுராசனம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். கணுக்கால்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு உடலையும் கால்களையும் உயர்த்திய நிலையில் எவ்வளவு நேரம் இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் இருக்கவும். பிறகு மெதுவாக மார்பையும் முகத்தையும் பூமியை நோக்கித் தாழ்த்

தவும். கணுக்கால்களைப் பிடித்திருக்கும் பிடியை நெகிழ்த்தவும். கைகளை உடலை ஒட்டியபடி அமர்த்தவும். தொடக்கத்தில் இருந்தது போல் கால்களை நேராக நீட்டிக் கொள்ளவும். அதாவது குப்புறப்படுத்த நிலைக்கே வரவும்.

குறிப்பு: ஆசனங்களைச் செய்யும்போது உடல் நெகிழ்ந்திருக்கும் நிலைகளில் மூச்சை உள்ளே இழுக்க வேண்டும். உடல் சுருங்கியும் விரைப்பாகவும் இருக்கும் நிலைகளில் மூச்சை வெளியே விட வேண்டும். இது ஒரு பொதுவான நியதி. ஆசனங்கள் செய்வதில் நாளுக்கு நாள் மகிழ்ச்சியும் முன்னேற்றம் ஏற்படுவதைக் கவனிக்கவேண்டும்.

6. சவாசனம்: மேலே குறிப்பிட்ட ஆசனங்களையெல்லாம் செய்த பிறகு சிறிது நேரம் உடலுக்கு நல்ல ஓய்வும் ஆறுதலும் தரவேண்டும். அதற்குச் சவாசனம் மிகவும் பொருத்தமான ஆசனம். மல்லாந்து படுத்துக் கொள்ளவும். கால்களை நேராக நீட்டிக் கொள்ளவும். முகத்தை நேராக வைத்துக் கொள்ளவும். இரண்டு கைகளையும் உடலை ஒட்டியபடி நீட்டிக் கொள்ளவும். உடலை நன்றாக நெகிழ்ச்சி நிலைக்குக் கொண்டு வரவும். நெகிழ்ச்சி நிலையை உருவாக்கத் தொடங்கும் போது காலிலிருந்து தொடங்கித் தலைவரை வரலாம். கொஞ்சங்கூட விரைப்பு இல்லாமல் உடல் உறுப்புகள் எல்லாம் துவண்டு நெகிழ்ச்சி நிலையில் இருக்கும் போது நிரம்ப ஓய்வும் ஆறுதலும் கிடைக்கிறது. இந்நிலையில் இருக்கும் போது கண்களை இயல்பாக மூடிக்கொண்டுவிடுவது நல்லது. நீங்கள் விரும்புமளவிற்கு இந்த நிலையில் இருந்து விட்டுக் கண்களைத்திறந்து கால்களையும் கைகளையும் மெல்ல அசைத்த பிறகு நேராக எழுந்து உட்கார வேண்டும். பிறகு உங்கள் விருப்பம் போல் வேறு பணிகளில் ஈடுபடலாம்.

குறிப்பு:


உடல் சவாசன நிலையில் இருக்கும்போது மூச்சை இயல்பாக நிதானமாக இழுத்து வெளியே விடவேண்டும். உடல் சவாசனத்தில் இருக்கிறது என்பதை மறந்து தூங்கிவிடக் கூடாது. ஆழ்ந்த தூக்கத்தில் கூடப் பெற முடியாத ஓய்வு, அமைதி ஆறுதல் ஆகியவற்றைச் சவாசனம் நமக்கு அளிக்கும். தூங்கி விட்டால் அவற்றை நாம் அநுபவிக்க முடியாமல் போய்விடும். விழிப்பாக இருந்து அவற்றை அனுபவிக்க வேண்டும்.

நல்ல உடலையும் நல்ல மனத்தையும் பெற்று வாழ்க்கையை வளமாக்க விரும்பும் ஒருவன் இங்கே குறிப்பிட்ட சில ஆசனங்களை மட்டும் கற்றுக் கொண்டாலும் போதும். எல்லா ஆசனங்களையும் பயில வேண்டும் என்று கட்டாயம் இல்லை; அது தேவையும் இல்லை; இங்கே நாம் குறிப்பிட்ட ஆசனங்களே நம் உடலை நம் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப் போதுமானவை. ஆசனங்கள் செய்வதெல்லாம் உடலைப் பக்குவப்படுத்துவதற்காகவே என்பதையும் உடலை வருத்துவதற்காக அல்ல என்பதையும் நாம் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உடலைப் பக்குவப் படுத்திய பிறகு அதே நெறியில் வேறு நிலையில் நாம் செய்ய வேண்டிய இன்றியமையாத பணிகள் மேலும் உள்ளன என்பதை நாம் அடிக்கடி நினைவில் கொள்ள வேண்டும். இங்கே குறிப்பிட்ட ஆசனங்களைக் கூட நாம் வாழ்நாள் முழுவதும் இடைவிடாது செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உடலையும் மனத்தையும் நாம் பக்குவப்படுத்தி விட்டால் ஆசனங்கள் நமக்குத்தேவையில்லை என்ற நிலை கூட ஏற்படலாம்.

முறையாக யோக நெறியில் நின்று பயன் பெற விரும்புவோர் இங்கே கூறிய ஆறு ஆசனங்களையும் கற்றுக் கொள்வது மிகவும் நல்லது. ஆசனங்களைப் பற்றிப் படித்தால் மட்டும் போதாது. படங்களோடு விளக்கப்பட்டுள்ள யோகாசன நூல்களையும் பார்த்து ஆசனங்களைச் செய்து பழகிக் கொள்ள வேண்டும்.

***






அ. மினகேதன் சிங்

## இலக்குமணன் திருவடிகள்

மணிப்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் காணப்படும் இலக்குமணன் திருவடிகளைத்தான் இங்கே காணுகின்றீர்கள். இலக்குவனே செயலாற்றல் சின்னம் – வெற்றிக்கு வழிபட வேண்டியவர் என்ற கருத்து வங்கம், அஸ்ஸாம், மணிப்பூர் மாநிலங்களில் மரபிலும் நடைமுறையிலும் உள்ளதாம். இத்தகவலை மணிப்பூரிலுள்ள எண்பதாண்டான - சாகித்ய அகாதமி பரிசுகள் முதலான பல சிறப்புகளைப் பெற்ற அ. மினகேதன் சிங் தெரிவிக்கிறார்கள்.

செய்தி : பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி



# ஆலய மேம்பாட்டுத் திட்டத்தினால் ஒருவேளை பூசை நிதியாக ரூ. 5000 நிதி உதவி பெற்ற ஆலயங்கள்

[சென்னை, செங்கற்பட்டு, வடார்க்காடு மாவட்டங்கள்]

(சென்னை உதவி ஆணையர் பிரிவில் அடங்கிய கோயில்கள்)

அருள்மிகு :

1. நித்தியகல்யாணவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,
ஆரணி, பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

2. கிராம எல்லையம்மன் திருக்கோயில்
சின்னம்பேடு, பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

3. பிடாரி செல்லியம்மன் திருக்கோயில்,
பெரவள்ளூர், பொன்னேரி வட்டம்.
செங்கற்பட்டு மாவட்டம்.

4. தூளியம்மன் திருக்கோயில்,
பெரவள்ளூர், பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

5. செல்வ விநாயகர் திருக்கோயில்,
பஞ்செட்டி, பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

6. வாவனேஸ்வரர் திருக்கோயில்
மற்றும் அழகநாதர் திருக்கோயில்,
போரூர், பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

7. இலட்சுமியம்மன் திருக்கோயில்,
பஞ்செட்டி, பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

8. எல்லையம்மன் திருக்கோயில்,
அத்திப்பேடு, பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

9. இராஜகோபாலசுவாமி திருக்கோயில்,
சோழவரம், பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

10. அகத்தீஸ்வரர் திருக்கோயில்,
சோழியம்பாளையம், சோழவரம்,
பொன்னேரி வட்டம்,
செங்கை மாவட்டம்.

11. இந்திரேசுவரர் திருக்கோயில்,
ஆற்காடு, பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்,

12. பிடாரிசெல்லியம்மன் திருக்கோயில்,
எருமைவெட்டிபாளையம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

13. கனகதுர்கையம்மன் திருக்கோயில்,
பெரும்பேடு கிராமம்,
பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.


14. கன்னியம்மன் திரௌபதியம்மன் திருக்கோயில்
லிங்கப்பையன்பேட்டை, பொன்னேரிவட்டம்
செங்கை மாவட்டம்.

15. நெல்லூரம்மன் திருக்கோயில்,
ஆலாடு கிராமம், பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

16. குழந்தையம்மன் திருக்கோயில்,
கொளத்தூர், பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

12.8.1986 அன்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் ஒரு வேளை பூசைக்காக நிதி உதவி பெற்ற ஆலயங்களின் பட்டியல்

| வ. எண் | மாவட்டம் | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 60 |
| 2. | செங்கை | 60 |
| 3. | வட ஆர்க்காடு | 45 |
| 4. | கோவை | 60 |
| 5. | சேலம் | 55 |
| 6. | பெரியார் | 45 |
| 7. | தர்மபுரி | 75 |
| 8. | தஞ்சை | 315 |
| 9. | தென் ஆர்க்காடு | 50 |
| 10. | திருச்சி | 45 |
| 11. | புதுக்கோட்டை | 105 |
| 12. | மதுரை (அண்ணா மாவட்டமும் அடங்கும்) | 75 |
| 13. | இராமநாதபுரம் (பசும்பொன், காமராசர் மாவட்டங்களும் அடங்கும்) | 30 |
| 14. | திருநெல்வேலி | 180 |
| 15. | கன்னியாகுமரி | 90 |
| | மொத்தம் | 1,300 |



மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் சென்னை, செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டம் ஆலயங்களின் பூசைநிதிக்கான காசோலையைத் துணை ஆணையர் திரு ந. சுவாமிநாதன் அவர்களிடம் வழங்குகிறார்.

17. செல்லியம்மன் திருக்கோயில்,
திருவெள்ளவாயல், பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

18. பிடாரிமகிலம்மன் திருக்கோயில்,
வேலூர், பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

19. கணபதீஸ்வரர் வகையறா திருக்கோயில்,
கிடதண்டலம், பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

20. லட்சுமிநாராயணபெருமாள் திருக்கோயில்,
மெதூர், பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

21. மாரியம்மன் திருக்கோயில்,
மெதூர், பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

22. புஷ்பரதீஸ்வரர் ஆலயம்,
ஞாயிறு கிராமம், பொன்னேரி வட்டம்,
செங்கை மாவட்டம்.

23. தர்மராஜா திருக்கோயில்,
சோலையப்ப நாயக்கன் தெரு,
பழைய வண்ணாரப் பேட்டை,
சென்னை-21.

25. தண்டு துலுக்கானத்தம்மன் திருக்கோயில்,
சாலை விநாயகர் திருக்கோயில் தெரு,
முத்தியால்பேட்டை, சென்னை-1.

26. தண்டு மாரியம்மன் திருக்கோயில்,
தம்புசெட்டி தெரு, முத்தியால்பேட்டை,
சென்னை-1.

27. முத்துமாரியம்மன் திருக்கோயில்,
தம்புச்செட்டி தெரு, சாலைவிநாயகர்கோயில்
தெரு, முத்தியால்பேட்டை,
சென்னை-1.

28. கடற்கரை கபிலவிநாயகர் திருக்கோயில்,
கடற்கரைசாலை தெரு,
முத்தியால்பேட்டை,
சென்னை-1.

29. கடற்கரை மாரியம்மன் திருக்கோயில்,
மூர்த்திகள் லைன், சென்னை-1.

30. திருவள்ளுவர் திருக்கோயில்,
திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை-19.

31. நந்தீஸ்வரர் திருக்கோயில்,
திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை-19.

32. எல்லையம்மன் திருக்கோயில்,
சாத்தாங்காடு, காலடிப்பேட்டை,
திருவொற்றியூர், சென்னை-19.

33. கிராமதேவதை மாத்தம்மன் கோயில்,
பழைய ஆட்டுத்தொட்டி சாலை,
இராயபுரம், சென்னை-13.

34. முனீஸ்வரர் திருக்கோயில்,
எஸ்கார்ட் சாலை, இராயப்பேட்டை,
சென்னை-14.

35. சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில்,
பெரவள்ளூர், ஜவஹர் நகர்,
சென்னை—82.

36. வினைதீர்த்த விநாயகர் திருக்கோயில்,
ஆதிதுளிர்காலனத்தம்மன் கோயில்,
காமராஜர்புரம் ,சென்னை-34.

37. மாயாபராசக்தியம்மன் திருக்கோயில்,
வால்டாக்ஸ் சாலை, சென்னை-79.

38. சோலை விநாயகர் திருக்கோயில்,
சுப்பிரமணிய முதலி தெரு,
சென்னை-1.

39. கற்பகவிநாயகர் திருக்கோயில்,
திருப்பள்ளித் தெரு, சென்னை-79.

40. சொர்ணவிநாயகர் திருக்கோயில்,
ரெட்டை விநாயகர் திருக்கோயில்,
சென்னை-1.

41. பழனியாண்டவர் திருக்கோயில்,
தங்கசாலைத் தெரு, சென்னை-79.

42. ஓம்பராசக்தி கருமாரியம்மன் திருக்கோயில்
பிடாரி கோயில் தெரு,
சென்னை-1.

43. ரேணுகா பரமேஸ்வரி திருக்கோயில்,
திருப்பள்ளி தெரு,
சென்னை-79.

44. பெரியபாளையத்தம்மன் திருக்கோயில்,
பெரியமேடு,
சென்னை—3.

45. துலுக்கானத்தம்மன் திருக்கோயில்,
பெரியமேடு,
சென்னை—3.

46. கன்னியம்மன் திருக்கோயில்,
லட்சுமணதாஸ் வீதி, எடப்பாளையம்,
சென்னை.

47. பெரியபாளையத்தம்மன் திருக்கோயில்,
சண்முகராயன் தெரு,, ஏழுகிணறு,
சென்னை—1.

48. சமயவரத்தம்மன் திருக்கோயில்,
ஏழுகிணறு,
சென்னை-1.

49. தண்டுதுலுக்கானத்தம்மன் திருக்கோயில்,
தங்கசாலை,
சென்னை-79.

---

வெளியே காட்டிடும் கோபம்
மன்னிப்புக்கு வழிதேடும்
உள்ளே அடக்கிவைக்கும் கோபம்
பழிக்கு வழிதேடும்

---

50. நடராசர் திருக்கோயில்,
கோவிந்தப்ப நாயகன் தெரு,
சென்னை-3.

51. சஞ்சீவி விநாயகர் திருக்கோயில்,
பெரியமேடு,
சென்னை-3.

52. வினைதீர்த்த விநாயகர் திருக்கோயில்,
யானைகவுனி, சென்னை-3.

53. மாரியம்மன் திருக்கோயில்,
கல்யாணபுரம்,
சென்னை-3.

54. சுந்தரவிநாயகர் திருக்கோயில்,
278 தங்கசாலைத் தெரு,
சென்னை-3.

55. வெங்கடேஸ்வரர் வேம்புலியம்மன்
திருக்கோயில்,
கொட்டிவாக்கம்,
சென்னை-31.

56. வேம்புலியம்மன் திருக்கோயில்,
நந்தம்பாக்கம்,
சென்னை-79.

57. நந்தீஸ்வரர் திருக்கோயில்,
ஆதம்பாக்கம்,
சென்னை.

58. வீரபத்ரசுவாமி திருக்கோயில்,
சோலையூர், தாம்பரம்,
சென்னை.

59. வரசித்திவிநாயகர் திருக்கோயில்,
ஆதம்பாக்கம்,
சென்னை.

60. வேம்புலியம்மன் திருக்கோயில்,
மடிப்பாக்கம்,
சென்னை.

**(காஞ்சிபுரம் உதவி ஆணையர் பிரிவில்
அடங்கிய கோயில்கள்)**

அருள்மிகு :

1. மாரிபோனாட்சியம்மன் திருக்கோயில்,
அகனி, மதுராந்தகம் வட்டம்
செங்கற்பட்டு மாவட்டம்.

2. லட்சுமிநாராயணப்பெருமாள் ஆலயம்,
அக்கியூர், மதுராந்தகம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

3. பிடாரி காளியம்மன் திருக்கோயில்,
அனுமந்தபுரம், செங்கற்பட்டு வட்டம்
மற்றும் மாவட்டம்.

4. படவேட்டம்மன் திருக்கோயில்,
அரன்வாயல், திருவள்ளூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

5. நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்,
அயலூர், திருவள்ளூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

6. வேணுகோபாலசுவாமி திருக்கோயில்,
சித்திராஜகண்டிகை,
கும்மிடிப்பூண்டி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

7. சுக்காளம்மன் ஆலயம்,
அரியத்தூர்,
திருவள்ளூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

8. ஆதிகேசவப்பெருமாள் ஆலயம்,
ராமஞ்சேரி, திருவள்ளூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

9. பெருமாள் மற்றும் ஈஸ்வரர் திருக்கோயில்,
மருதம், காஞ்சிபுரம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

10. இளங்காளியம்மன் திருக்கோயில்,
அகரம்துளி, உத்திரமேரூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

11. நல்லாட்சியம்மன் ஆலயம்,
காரியமங்கலம், உத்திரமேரூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

12. சோணாசலேஸ்வரர் ஆலயம்,
சொர்க்காப்பேட்டை, திருத்தணி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

13. அங்காளம்மன் ஆலயம்,
வீரராகவபுரம்,
திருத்தணி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

14. பிடாரியம்மன் மாரியம்மன் ஆலயம்,
ஓரத்தூர், திருப்பெரும்புதூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

15. முருகாத்தம்மன் வகையறா ஆலயங்கள்,
காட்டுப்பாக்கம், திருப்பெரும்புதூர்வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

16. லட்சுமிநரசிம்மசுவாமி ஆலயம்,
செவிலிமேடு, காஞ்சிபுரம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

17. பாலமுருகன் ஆலயம்,
புரிசை, காஞ்சிபுரம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

18. மணிகண்டேஸ்வரர் ஆலயம்,
திருப்புட்குழி, காஞ்சிபுரம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

---

கூரை செம்மையாக வேயப்படாத வீட்டினுள்
மழைநீர் ஒழுகுவது போல
நன்னெறி பயிற்சியில்லாத மனத்தினுள்
ஆசைகள் புகுந்துவிடுகின்றன.

---

19. திருலோகநாதசுவாமி திருக்கோயில்,
திருப்பருத்திக்குன்றம், காஞ்சிபுரம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

20. லட்சுமிஹயக்கிரீஸ்வரர் ஆலயம்,
கூரம், காஞ்சிபுரம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

21. மாண்டுகன்னீஸ்வரர் திருக்கோயில்,
பெரியகாஞ்சிபுரம், காஞ்சிபுரம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

22. பாண்டவதூதபெருமாள் ஆலயம்,
பெரிய காஞ்சிபுரம், காஞ்சிபுரம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

23. மாரிமேற்கத்தியம்மன் திருக்கோயில்,
உத்திரமேரூர் நகர் மற்றும் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

24. எல்லம்மன் திருக்கோயில்,
சானவாக்கம், உத்திரமேரூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

25. எல்லம்மன் திருக்கோயில்,
உத்திரமேரூர் நகர் மற்றும் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

26. தர்மராஜா திருக்கோயில்,
உத்திரமேரூர் நகர் மற்றும் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

27. குமரேஸ்வரர் திருக்கோயில்,
மலையாங்குளம், உத்திரமேரூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

28. பிடாரி செல்லியம்மன் ஆலயம்,
தாந்தோனியம்மன் ஆலயம்,
அத்திவாக்கம், மதுராந்தகம் வட்டம்,
செங்கை மாவட்டம்.

29. அம்மன் திருக்கோயில்,
அரசூர், மதுராந்தகம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

30. திரௌபதியம்மன் ஆலயம்,
அருங்குளம், மதுராந்தகம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

31. பிள்ளையார் ஆலயம்,
ஏலப்பாக்கம், மதுராந்தகம் வட்டம்
செங்கற்பட்டு மாவட்டம்.

32. அரங்கநாதர் ஆலயம்,
கருங்குழி (மலைப்பாளையம்)
மதுராந்தகம். வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

33. வேணுகோபாலசுவாமி திருக்கோயில்,
காட்டுக்கடலூர், மதுராந்தகம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

34. லோகநாதபுரிய நவநீதிகண்ணன் ஆலயம்,
இந்தூர், மதுராந்தகம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

35. பிடாரி சீயத்தம்மன் ஆலயம்,
ஒழவெட்டி, மதுராந்தகம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

36. சுந்தரவரதராசப் பெருமாள் ஆலயம்,
கருக்காமாலை, மதுராந்தகம் வட்டம்,
செங்கை மாவட்டம்.

37. லட்சுமிநாராயணப் பெருமாள் ஆலயம்,
கல்பட்டு, மதுராந்தகம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

38. திரௌபதியம்மன் ஆலயம்,
களத்தூர், மதுராந்தகம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

39. தர்மராஜா ஆலயம்,
பொம்மராஜாம் பேட்டை,
திருத்தணி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

40. கருணாகரப்பெருமாள் ஆலயம்,
பெரியகடம்பூர், திருத்தணி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

41. பட்டாபிராமசுவாமி ஆலயம்,
மேளப்பூடி, திருத்தணி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

42. வரசித்திவிநாயகர் திருக்கோயில்,
மேளப்பூடி, திருத்தணி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

43. துர்கையம்மன் திருக்கோயில்,
மேளப்பூடி, திருத்தணி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

44. பிடாரி செல்லியம்மன் ஆலயம்,
ஆற்றம்பாக்கம், திருவள்ளூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

45. வீரபத்திரசுவாமி ஆலயம்,
ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

46. பாண்டுரங்கசாமி ஆலயம்,
திருவள்ளூர் நகர் மற்றும் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

47. வருளாத்தம்மன் ஆலயம்,
ஆத்தனஞ்சேரி, திருப்பெரும்புதூர் வட்டம்'
செங்கற்பட்டு மாவட்டம்.

48. பொன்னியம்மன் ஆலயம்,
ஒரத்தூர், திருப்பெரும்புதூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

49. சுந்தரவிநாயகர் ஆலயம்,
கீழ்படப்பை, திருப்பெரும்புதூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

---

இறைவன் மனிதனுக்குச் சொன்னது
பகவத்கீதை

மனிதன் இறைவனுக்குச் சொன்னது
திருவாசகம்

மனிதன் மனிதனுக்குச் சொன்னது
திருக்குறள்

---

50. கோதண்டராமசுவாமி ஆலயம்,
பொழுமணிவாக்கம்,
திருப்பெரும்புதூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

51. தேரடிவிநாயகர் ஆலயம்,
திருப்பெரும்புதூர் நகர் மற்றும் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

52. குடிலம்மன் ஆலயம்,
மனப்பாக்கம்,, திருப்பெரும்புதூர் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

53. சோமசுந்தரேஸ்வரர் வள்ளிசேனா
சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,
வடக்குப்பட்டு, திருப்பெரும்புதூர்,
செங்கற்பட்டு மாவட்டம்.

54. வேணுகோபாலசுவாமி திருக்கோயில்,
திருமுடிவாக்கம், திருப்பெரும்புதூர்வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

55. திருவெங்கீஸ்வரர் ஆலயம்,
திருமுடிவாக்கம், திருப்பெரும்புதூர் வட்டம்
செங்கற்பட்டு மாவட்டம்.

56. வேணுகோபாலசுவாமி பஜனை மடம்,
திருமுடிவாக்கம், திருப்பெரும்புதூர்வட்டம்
செங்கற்பட்டு மாவட்டம்.

57. கைலாசநாதர் சாந்தம்மன் என்கிற
செல்லியம்மன் ஆலயம், கண்ணம்பாக்கம்,
கும்மிடிப்பூண்டி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

58. எல்லம்மன் வேணுகோபாலசுவாமி ஆலயம்,
சித்தாமூர், கும்மிடிப்பூண்டி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

59. வெங்கடேசப்பெருமாள் ஆலயம்,
சின்னபொம்மாச்சி குளம்,
கும்மிடிப்பூண்டி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

60. பிடாரியம்மன் ஆலயம்,
தேர்வாய்க் கண்டிகை
கும்மிடிப்பூண்டி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

(வேலூர் உதவி ஆணையர் பிரிவில் அடங்கிய கோயில்கள்)

அருள்மிகு:

1. வரதராஜப்பெருமாள் ஆலயம், கரிகிரி, குடியாத்தம் வட்டம், வட ஆற்காடு மாவட்டம்.

2. ராமநாதீஸ்வரர் ஆலயம், பொன்னாத்தூர், வேலூர் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

3. பட்டாபிராமசாமி ஆலயம், நெல்வாய், வேலூர் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

4. பாலமுருகன் ஆலயம், கழனிப்பாக்கம், வேலூர் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

5. தாந்தோனியம்மன் ஆலயம், தவனி, வந்தவாசி வட்டம், வடாற்காடு மாவட்டம்.

6. திரெளபதியம்மன் ஆலயம், மோசவாடி, வந்தவாசி வட்டம், வடாற்காடு மாவட்டம்.

7. பிடாரியம்மன் ஆலயம், தத்தனூர், போளூர் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

8. முத்தாளம்மன் ஆலயம், தெள்ளார், வந்தவாசி வட்டம், வடாற்காடு மாவட்டம்.

9. மாரியம்மன் ஆலயம், இரும்பேடு, ஆரணி வட்டம், வடாற்காடு மாவட்டம்.

10. பிள்ளையார் ஆலயம், பையூர், ஆரணி வட்டம், வட ஆற்காடு மாவட்டம்.

11. மாரியம்மன் ஆலயம், மாம்பட்டு, போளூர் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

12. பிடாரியம்மன் ஆலயம், காமக்கூர், ஆரணி வட்டம், வடாற்காடு மாவட்டம்.

13. மாரியம்மன் ஆலயம், அண்டப்பேட்டை, செங்கல் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

14. பொன்முடிராயர் பிள்ளையார் ஆலயம், வீராணம், செங்கம் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

15. குளக்கரை விநாயகர் ஆலயம், சிறுவள்ளூர், போளூர் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

எல்லா சப்தங்களையும் அமைதிப்படுத்தி
மெளனமாக்கி விடலாம்—ஒன்றைத்தவிர
அதுநம் மனசாட்சியின் சப்தம்
அதை நம்மால் அலட்சியப்படுத்த முடியும்
ஆனால் அழிக்க முடியாது.

16. செல்லப்பிள்ளையார் ஆலயம், காஞ்சி, செங்கை வட்டம், வடாற்காடு மாவட்டம்.

17. அம்மன் (எ) காளியம்மன் ஆலயம், கீழ்நாத்தூர், திருவண்ணாமலை வட்டம், வடாற்காடு மாவட்டம்.

18. அசலையம்மன் ஆலயம், கீழ்செட்டிபட்டு, திருவண்ணாமலை வட்டம் வடாற்காடு மாவட்டம்.

19. வேணுகோபாலசுவாமி ஆலயம், முத்தாலம்மன் மாரியம்மன் காளியம்மன் ஆலயங்கள், கோவூர் கிராமம், போளூர் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

20. அம்மன் என்கிற முத்தாலம்மன் ஆலயம், சொரந்தை, திருவண்ணாமலை வட்டம், வடாற்காடு மாவட்டம்.

21. வெங்கடேசப்பெருமாள் ஆலயம், பெருமாத்தாங்கல், செய்யார் வட்டம், வட ஆற்காடு மாவட்டம்.

22. வெங்கடேசப்பெருமாள் ஆலயம், பகாஜனப்பாக்கம், செய்யார் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

23. விருபாட்சீஸ்வரர் ஆலயம், இராமகிருஷ்ணாபுரம், செய்யார் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

24. கலிதீர்த்தவிநாயகர் ஆலயம், மோரணம், செய்யார் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

25. மாரியம்மன் ஆலயம், கெளதமபேட்டை, திருப்பத்தூர் வட்டம், வட ஆற்காடு மாவட்டம்.

26. ஆஞ்சநேயர் ஈஸ்வரர் ஆலயம், சேம்பாறை, ஜவ்வாதுமலை, திருப்பத்தூர் வட்டம், வட ஆற்காடு மாவட்டம்.

27. சுந்தரவிநாயகர் ஆலயம், கடைவீதி, திருப்பத்தூர் நகர் மற்றும் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

28. ராமச்சந்திரசுவாமி ஆலயம், அச்சமங்கலம், திருப்பத்தூர் வட்டம், வடாற்காடு மாவட்டம்.

29. ஞானசெல்வவிநாயகர் ஆலயம்,
திருநீலகண்டர் தெரு, ஆற்காடு நகர்,
வட ஆற்காடு மாவட்டம்.

30. லட்சுமிநாராயணப்பெருமாள் ஆலயம்,
கிராம்பாடி, வாலாசா வட்டம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

31. வரதராசப்பெருமாள் ஆலயம்,
வளையத்தூர், ஆற்காடு வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

32. ஏகாம்பரேஸ்வரர் ஆலயம்,
சத்தியவாடி. வாலாசா வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

33. ஆலடிப்பிள்ளையார் ஆலயம்,
தலங்கை, வாலாசா வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

34. பெருமாள் ஆலயம்,
சோதனூர், அரக்கோணம் வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

35. தர்மராஜா ஆலயம்,
அம்மனூர், அரக்கோணம்
வட ஆற்காடு மாவட்டம்.

36. தக்காளியம்மன் ஆலயம்,
தக்கோலம், அரக்கோணம் வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

37. மாரியம்மன் ஆலயம்,
ஆர். எஸ். நகர், பிச்சனூர்,
குடியாத்தம் வட்டம்,
வடாற்காடு மாவட்டம்.

38. மாரியம்மன் வகையறா ஆலயங்கள்,
பில்லாந்திப்பட்டு, குடியாத்தம் வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

39. பொன்னியம்மன் ஆலயம்,
கரடாம்பட்டு, குடியாத்தம் வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

40. கங்கையம்மன் ஆலயம்,
செஞ்சி, குடியாத்தம் வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

41. நிறைவினையாம்பிகை சமேத வாலீஸ்வரர்த் திருக்கோயில்,
திருப்பாற்கடல், வாலாசா வட்டம்,
வடாற்காடு மாவட்டம்.

42. காமாட்சியம்மன் திருக்கோயில் வட ஒட்டித் தெரு, திருவண்ணாமலை நகர் மற்றும் வட்டம், வட ஆற்காடு மாவட்டம்.

43. வாமனகணபதி ஆலயம்,
நதாண்டப்பட்டு, செங்கம் வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

44. கனககிரீஸ்வரர் ஆலயம்,
தேவிகாபுரம், ஆரணி வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

45. அழகர் பெருமாள் ஆலயம்,
பெரிய நகரம், போளூர் வட்டம்,
வடாற்காடு மாவட்டம்.

## இராகு ஸ்தலம்

தஞ்சை மாவட்டத்தில் திரு நாகேஸ்வரம் அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில் இராகு பகவான் பூசித்த தலம் ஆகும். இத்திருத் தலம் இராகுதோஷ நிவர்த்திக்கு மிகச்சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்கி வருகிறது.

இத்தலத்தில் இராகுபகவான் தமது இருதேவியருடன் தனிச் சந்நிதி கொண்டு சிறப்புடன் அருள் பாலித்து வருகிறார். இப்பெருமானுக்குப் பாலாபிஷேகம் செய்யும்போது பால்நீல நிறமாவது இன்றும் கண்கூடாகக் காண முடியும் அற்புதமாகும்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இராகு தோஷ நிவர்த்திக்காக ஏராளமான அன்பர்கள் இங்கே வந்து வழிபட்டு, நலம் பெற்று வருகிறார்கள்.

## தீபம் காண்போம் புண்ணியம் சேர்ப்போம்

''கார்த்திகைக்குக் கார்த்திகை நாள் ஒருசோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்
வாய்த்த அந்தச் சுடர்காணில் பசிப்பிணியில்
லாது உலகின் மன்னி வாழ்வார்
பார்த்தவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும் அது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார்.

—அருணாசலப் புராணம்.

திருவண்ணாமலை மகாதீபம் வரும் 14-12-86 ஞாயிறு அன்று ஏற்றப்பட இருக்கிறது. பக்தர்கள் திரளாக வந்து தீபதரிசனம் காண, அறநிலையத் துறை சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது

# அணுக்கப்பிள்ளை சுந்தரர்

டாக்டர் இரா. நாகசாமி

இயக்குநர்

தொல் பொருள் ஆய்வுத்துறை

தஞ்சாவூரில் இராஜராஜ சோழன் தோற்றுவித்த பெரும் கோயிலில் கர்ப்பகிருஹத்தைச் சுற்றியுள்ள உள்சுற்றுச் சுவரில் சுந்தரமூர்த்தி நாயனாருடைய ஓவியம் தடுத்தாட்கொண்ட புராணத்தில் தொடங்கி, அவர் வெள்ளை யானை மீது ஏறி கயிலையை அடைந்து, உமை அன்னையோடு வீற்றிருக்கும் சிவ பெருமானின் முன்பு கரம் கூப்பி அமர்ந்திருக்கும் நிலை வரையில், மிக விரிவாக அழகாக படைக்கப்பட்டுள்ளது. இராஜராஜனுடைய காலத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் மிகவும் சிறப்பாக போற்றப்பட்டார் என்று இதிலிருந்து அறிய முடிகிறது. இக்காலத்தில் தான் நம்பி ஆண்டார் நம்பி சுந்தரமூர்த்தியை பாட்டுடைத் தலைவன் ஆக்கி, அவர் பாடியுள்ள திருத்தொண்டத் தொகையை விரிவாக்கி, திருத்தொண்டர் திருவந்தாதி பாடியுள்ளார் என்பதும் நினைவில் கொள்ளலாம்.

இராஜராஜன் காலத்தில் சுந்தரர் எவ்வளவு அன்போடு வணங்கப்பட்டார் என்பதை எடுத்துரைக்கும் கல்வெட்டுக்களும் உண்டு. கும்பகோணத்துக்கு அருகில் கூகூர் என்ற ஊரில் ஆம்பரவனேஸ்வரர் கோயிலில் இரண்டு கல்வெட்டுக்கள் உண்டு. கல்வெட்டுக்களில் இருந்து இக்கோயிலின் பெயர் ஆதித்தீஸ்வரம் என்று அறிகிறோம். ஆதித்தீஸ்வரம் என்பது காலப்போக்கில் ஆம்ப்ரவனேஸ்வரர் என மருவியது போலும்! இக்கல்வெட்டுக்கள் இரண்டும் முதல் இராஜராஜ சோழன் காலத்தவை. ஏறக்குறைய கி.பி. 900ல் ஆண்ட ஆதித்த சோழன் பெயரால் இக்கோயில் உருவாக்கப்பட்டது போலும்! இராஜராஜனுடைய 10வது ஆண்டு கல்வெட்டு கி.பி. 995ல் எழுதப்பட்டது. இது இவ்வூர் சபையார் இக்கோயிலின் ஈசுவரர்க்கு 31 குழிகள் உடைய மனையும், 9 மா நிலமும் கொடுத்ததைக் குறிக்கிறது. இவற்றைச் சித்திரைத் திருவிழாவுக்காக, திருவிழாப் புறமாக ஊரார் கொடுத்தனர். இதைக் குறிக்கும் கல்வெட்டுப் பகுதியைப் பார்ப்போம். ''ஆதித்தீஸ்வர பட்டாரகர் நம்முடைய அணுக்கப்பிள்ளை நம்பியாரூரனுக்கு சித்திரைத் திருவிழாவுக்காக திருவிழாப்புறம் ஆக விட்டதாக கூறுகிறது. நம்பியாரூரன் என்பது சுந்தரமூர்த்தி நாயனாரைக் குறிக்கும் என்பதை நாம் அறிவோம். அவரை கோயில் ஈசுவரரே ''நம்முடைய அணுக்கப் பிள்ளை நம்பியாரூரன் ''என்று கூறுகிறார் எனில் அவர்மீது சிவபெருமானுக்கு எவ்வளவு அன்பு இருந்தது எனக் காட்டுகிறது. சுந்தரருக்கு தம்பிரான் தோழன் என்ற ஒரு பட்டப் பெயர் உண்டு. அணுக்கன் என்றால் மிகவும்நெருங்கிய நட்பு பூண்ட உடன் இருக்கும் என்று பொருள்படும். ஆதலின் 10ம் நூற்றாண்டிலேயே அதாவது சேக்கிழார் பெருமான் பெரிய புராணம் பாடும் காலத்துக்கு 150 ஆண்டுகளுக்கும் முன்பாகவே சுந்தரர் சிவ பெருமானின் அணுககப்பிள்ளையாக தமிழ் மக்களால் கருதப்பட்டார் என்பதற்கு இக்கல்வெட்டு ஒன்றே சான்று. இவருக்குச் சித்திரை மாதத்தில் திருவிழா எடுககப்பட்டது என்பதும் இதனால் அறிகிறோம்.

இரண்டாவது கல்வெட்டு இராஜராஜனின் 12-ம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. முன் கல்வெட்டைக் காட்டிலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 997ல் எழுதபபட்டது. இக்கல்வெட்டிலும் ஊரார் நம்பி ஆரூரருக்கு நிலம் கொடுத்தது குறிக்கப்படுகிறது. இதைக் குறிக்கும் இடத்தில் 'கோயில் ஆழ்வாரை (திருவுள்ளம் கொண்ட) திருப்பதிகம் விண்ணப்பம் செய்த பிள்ளை நம்பி ஆரூரனாருக்கு பிரியம் ஆக ஊரோம் பரிசிலாக கொடுத்த நிலம் ''என்று குறிக்கிறது. சுந்தரமூர்த்தி சிவ பெருமானிடத்து திருப்பதியம் விண்ணப்பம் செய்தார் எனக் கல்வெட்டு குறிக்கிறது. ஆதலின் அவர் ''திருப்பதியம் விண்ணப்பம் செய்த பிள்ளை'' என்று அழைக்கப்படுகிறார். இவருக்குப் ''பிரியம் ஆக'' நிலம் ஊராரால் கொடுக்கப்பட்டது. இந்த நிலத்துக்கு கொடுக்கப்பட வேண்டிய இறை வரிகள் எல்லாம் ஊர் தானே கொடுப்பதாகக் கொண்டு நிலம் கொடுத்தனர். இதை ''இறையிலி முற்றூட்டாக செய்து கொடுத்தோம் கூகூர் ஊரோம்'' என்று கல்வெட்டு குறிக்கிறது. இவருக்குச் செய்த உபகாரத்தை மாற்ற நினைத்தவர்கள்காவேரி ஆற்றுச்சூலை தகர்த்தவர் பாவம் பெறுவர் என்றும், அரசன் ஆணையை மீறிய குற்றம் படுவர் என்றும் ஊரார் கூறினர். ஊரார் கூற ஊர் மத்யஸ்தன் நாராயணன் சக்ரபாணி இக்கல்வெட்டை எழுதினான். இக்கல்வெட்டை நோக்கும்போது சுந்தரர் உயிரோடு இருப்பது போலவும், சிவனிடத்து நேரில் விண்ணப்பம் செய்தது போலவும், அவர் மீது அன்பு கொண்டு ஊரார் நிலம் கொடுத்தமை அறிகிறோம். இவ்வூர் கல்வெட்டுக்களிலும் இராஜராஜனுடைய 10-ம் ஆண்டிலேயே சுந்தரமூர்த்தி நாயனார் சோழ நாட்டுக் கோயில்களில் மிக அன்புடன் வணங்கப்பட்டார் என்றும், அவருடைய வழிபாட்டுக்காக நிலங்கள் கொடுக்கப்பட்டனவென்றும் அவர் திருமேனிக்கு திருவிழா எடுக்கப்பட்டது என்றும் சான்றுடன் கல்வெட்டு பகர்கிறது எனில் இராஜராஜனுடைய ஆட்சியின் தொடக்கத்திலேயே தேவாரப் பதிகங்களும், பதிகம் பாடியோரும் சிறப்புற்று இருந்தனர் என்பது தெளிவு. எனில் இராஜ இராஜன் திருமுறை கண்டதாக கூறுவது என்னே?

# ஐந்தெழுத்தான் தந்த அற்புதத் தீர்ப்பு

டாக்டர் சிவ. பார்வதி,
முதல்வர்,
பாரதி மகளிர் கலைக் கல்லூரி, சென்னை.

சென்னை, சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் இந்திய ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையே அண்மையில் நடந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி இரு தரப்பினரும் சரிநிகர் சமானமான ஆற்றலுடையவர்கள் என்பதுதோன்ற அதன் 109 ஆண்டுக்கால வரலாற்றிலேயே இரண்டாம் முறையாகச் சமனில் முடிவு பெற்றமையைக் கண்டு நாம் அனைவரும் வியந்தோம்.

இதற்கு முன்னால் 1961 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய—மேற்கிந்திய அணிகளுக்கு இடையேநடைபெற்ற கிரிக்கெட்டுப் போட்டியும் இவ்வாறு சமனில் முடிந்ததாக அறிகிறோம்.

22—9—86 திங்கட்கிழமை சென்னை, சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் இறுதி ஐந்தாம் நாள் விளையாட்டினை நேரிலே கண்டவர்களானாலும் சரி, அல்லது தொலைக் காட்சியில் கண்டவர்களானாலும் சரி அவர்களுடைய மனம் எத்தகைய பரப்பரப்புக்கு ஆளாகியிருக்கும் என்பது என்னால் விவரிக்க முடியாத ஒன்று.

அன்று தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்து விளையாட்டைக் கண்ட லட்சக்கணக்கான நேயர்களில் யானும் ஒருத்தி என்ற முறையில் எனக்கு ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியைத்தான் 'ஐந்தெழுத்தான் தந்த அற்புதத் தீர்ப்பு' என்ற தலைப்பைத் தந்து விவரிக்கிறேன்.

இறுதி நாள் ஆட்டத்தில் 'இந்தியா வெற்றிக்குத் தேவையான 348 ஓட்டங்(ரன்) களை எடுத்து விட முடியாது. சுழல் பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்தி இந்திய வீரர்களைச் சுருட்டி விடலாம், வெற்றிக் கனியைப் பறித்து விடலாம்' என்ற துணிவில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஆலன் பார்டர் ஆட்டத்தை முடித்துக் கொண்டதாக (டிக்ளேர்) கூறி, இந்திய அணியை விளையாட வைத்தபோது, இந்திய அணி வீரர்கள் விளையாட்டை டிரா செய்துவிடக் கூடும் என்ற ஒரு நம்பிக்கை மட்டுமே விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த நேயர்களுக்கு இருந்தது.

ஆனால் 100-வது டெஸ்ட் போட்டியாகச் சென்னை சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் கலந்து கொண்டு விளையாடிய கவாஸ்கர் 90 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இந்தியாவிற்குச் சாதகமாகக்கொண்டு சென்றபோதும், அசாருதீன், மொகிந்தர் அமர்நாத், ஆகியோர் வேகமாக விளையாடி ஓட்டங்களைக் (ரன்களை) குவித்த பொழுதும் 'இந்தியா வெற்றி பெறும் வாய்ப்பும் இருக்கிறதே' என்பதாக நேயர்கள் முகத்தில் ஆசையைத் தேக்கி ஆட்டத்தை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கி விட்டார்கள்.

அசாருதீன் ஆட்டம் இழந்து அணித்தலைவர் கபில்தேவ் மைதானத்திற்குள் நுழைந்தபோது நேயர்களின் எதிர்பார்ப்பு மேலும் அதிகமாகியது. அடித்து விளையாடும் கபில்தேவ் குவிக்கும் ரன்களால் இந்தியாவின் வெற்றி பிரகாசமானதாகவே இருக்கும் என்று வர்ணனையாளர்கள் கூட வருணித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் என்ன துரதிர்ஷ்டம்! முதல் ஆட்டத்தில் (இன்னிங்சில்) 110 ரன்களுக்கு மேலும் குவித்து இந்தியா பாலோ ஆன் ஆக வேண்டியதைத் தவிர்த்த கபில்தேவ், 1 ஓட்டம் (ரன்) மட்டுமே எடுத்து இரண்டாம் (இன்னிங்சில்) ஆட்டத்தில் அவுட் ஆகி விட்ட துயரத்தை என்னென்பது.

ஆம், இந்தியாவின் வெற்றியை ஆவலோடு எதிர்பார்த்த இந்திய நேயர்களின் நம்பிக்கை தளர்ந்தது. ஆனால் சந்திரகாந்த் பண்டிட்டுடன் ஜோடி சேர்ந்த இந்திய அணியின் துணைத் தலைவர் ரவிசாஸ்திரி, சிக்சரும் பவுண்டரிகளுமாக அடித்துத் தூள் கிளப்பியபோது மறுபடியும் நேயர்களுக்கு உற்சாகம் பொங்க ஆரம்பித்தது. சந்திரகாந்த் பண்டிட்டும் கிரன்மோரும் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்களுக்குத் தாக்கு பிடிக்க முடியாமல் சுருண்டபோது, சிங்கமென அடித்து விளையாடிய சேதன் சர்மாவின் ஆட்டமும், இறுதி நேரத்திலும் ஓங்கியடித்துப் பந்தினைச் சிக்சருக்குத் தூக்கிய சிவலால் யாதவின் ஆட்டமும் சீக்கிரத்தில் மறக்கக்கூடியதா என்ன?

ஆட்டத்தின் தீர்ப்பு என்னவாக இருக்கும் எனக் காணத் துடித்த நேயர்களுக்குப் பதில் சொல்வதாக அமைந்திருந்த அந்த இறுதி ஓவரை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 6 பந்துக்களில் 4 ரன்கள் எடுத்தால் இந்தியாவுக்கு வெற்றி என்ற நிலை. சார்ஜாவில் பாகிஸ்தான் அணி வீரர் மியான்டட் இந்தியாவிற்கு எதிரான போட்டியில் இறுதி ஒரு பந்தில் வெற்றிக்கு 2 ரன்கள் தேவைப்பட்ட நேரத்தில் அந்த இறுதி பந்தை பவுண்டரிக்கு விரட்டி 4 ரன்களைக் குவித்து அவருடைய நாட்டிற்கு வெற்றியைத் தேடித்தந்ததைப் போல் நம்முடைய அணி வீரர்களும் 6 பந்துகளில் 4 ரன்களைக் குவித்து வெற்றியை ஈட்டித் தந்துவிடுவார்கள் என்பதைத்தான் எல்லோருமே எதிர்பார்த்தோம்.

ஆனால் ஐந்தெழுத்தான் தந்த அந்த அற்புதத் தீர்ப்பின்படி, முதல் பந்தில் ரவிசாஸ்திரி 2 ரன்களை

எடுத்தார். அடுத்த பந்தில் ரன் ஏதும் இல்லை. அதற்கடுத்த பந்தை ரவிசாஸ்திரி அடித்து ஓடி 1 ரன் எடுக்க, இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் தலா இரண்டு இன்னிங்சிலும் 744 ரன்கள் எடுத்துச் சம நிலையில் இருந்தன. இனி வெற்றிக்குத் தேவை ஒரே ஒரு ரன் மட்டுமே. அப்பொழுதும் மூன்று பந்துகள் கைவசம் இருந்தன. இறுதி வீரராக ஆட வந்த் மனிந்தர்சிங் பந்தை எதிர்கொண்டு விளையாடவேண்டும். அவர் எப்படியும் மட்டை போட்டுவிடாமல், மட்டையால் பந்தை அடித்து ஒரே ஒரு ரன்னை - வெற்றிக்குத் தேவையான ரன்னை எடுத்துவிடுவார் என எல்லோரும் மூச்சையும், பேச்சையும் அடக்கி கண்கள் இமைப்பதையும் மறந்து மனிந்தரின் மட்டையைப் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் அவரோ தன்னுடைய காலைப் பந்துக்குக் காட்டி எல்.பி.டபுள்யூ. ஆகி அவுட் ஆகிவிட்டார்., இந்திய மக்களின் ஆசையிலும் மண்ணைப் போட்டுவிட்டார் என்றால் நாம் யாரைக் குறை கூறுவது.

ஆட்டம் இவ்வாறு இரு அணியினருக்கும் வெற்றி தோல்வி இன்றிச் சமனில் முடிந்தது குறித்து அதற்காக மனிந்தரை நோவார் பலரும், ரவி சாஸ்திரியை நோவார் பலரும் உள்ளனர். ஆட்டம் தொடங்கிய நேரத்தில் இப்படி ஒரு முடிவை யாருமே எதிர் பார்த்திருக்க முடியாது. இரண்டு அணிகளில் ஒரு அணி வெற்றி பெறுவதாகவோ அல்லது காலம் போதாமலோ மழையின் காரமாகவோ ஆட்டம் டிராவில் முடிவதாகவோதான் விளையாட்டு முடியும் என யாரும் எதிர் பார்த்திருக்க முடியும்.

ஆனால் விளையாட நேரம் போதாமல் போகவில்லை. மழையும் வந்து விளையாட்டைக் கெடுக்கவில்லை. நடுவர்களின் தீர்ப்புப்படியும், அணித் தலைவர்களின் விருப்பப்படியும் விளையாட்டு தடையின்றி நடைபெற்றது. அப்படியிருந்தும் எத்தரப்பினருக்கும் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் சமனில் முடிந்தபோதுதான் இதைச் சாதாரணமான முடிவு என என்னால் கொள்ள முடியவில்லை. அந்த ஐந்தெழுத்தானே தந்த அற்புதத் தீர்ப்புதான் இந்த ''சமன்'' என்ற முடிவு.

ஆட்டம் நடந்த நாட்களும் ஐந்து. நம்மை ஆட்டி விளையாடும் ஆண்டவனின் நாமத்தில் அமைந்திருக்கும் எழுத்துக்களும் ஐந்து. ஐந்தாம் நாள் விளையாட்டில் இந்தியா காட்டிய தீரத்தைப் பார்த்து, இந்தியா வெற்றி பெற வேண்டும் என்று பலரும் பிரார்த்தித்தார்கள். என்வீட்டில் அனைவரும் ''நமசிவாய'' தோத்திரத்தைச் சொல்லியபடியே அந்த இறுதி நேரத்தில் இந்தியாவின் வெற்றிக்குப் பிரார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் அந்த ஐந்தெழுத்தானோ ஐந்துநாள் விளையாட்டுக்களையும் நன்ருக ஆய்ந்து பார்த்து ''சமன்'' என்ற முடிவுதான் பொருத்தத்திலும் பொருத்தமானதாக இருக்கும் என்பதைக் கணித்துத் தன்னுடைய தீர்ப்பை வழங்கியிருக்கிறான்.

முதல் இன்னிங்சில் ஆஸ்திரேலியா அணி அடித்துக் குவித்த 574 ரன்களையும் பாராட்ட வேண்டியது பரந்தாமனின் கடமை அல்லவா. அதேபோல் இந்தியாவை ஆடவைத்து இரண்டாவது இன்னிங்சை 170 ரன்களுடன் நிறுத்திக் கொள்வதாக அறிவித்த ஆஸ்திரேலிய அணித் தலைவரின் வீரத்தைப் பாராட்ட வேண்டியதும், ஐந்தெழுத்தானின் கடமையே அல்லவா.

இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் இந்தியாவிற்கு வெற்றியை வழங்கி விடுவது ஆஸ்திரேலிய அணி தன்னைப் பழி தூற்றக் காரணமாக அமைந்துவிடுமே என்று பழிக்கு அஞ்சி இருக்கிறான் ஐந்தெழுத்தான். அவருடைய திருவிளையாடல் புராணத்தில் பழியஞ்சின படலம் என்று ஒரு படலமே இருக்கிறதே. வேதியன் தன்னுடைய மனைவியைக் கொன்றது வேடனே என்ற குற்றம் சுமத்த, வேடனோ தான் ஏதும் அறியா அப்பாவி என அழுது புலம்ப, நீதி காண முடியாத பாண்டிய மன்னன் பழிக்கு அஞ்சினான் என அந்தப் படலத்திலே வரும். ''ஆறுதலை இல்லை அடியேனுக்கு அன்பாகத் தேறுதலைச் சொல்வார் சிலரில்லை— வேறேனக்குத் திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சும் சொக்கே நின்தாளே துணை''. பழிக்கஞ்சிய பாண்டியன் சொக்கேசனிடம் முறையிட்டு இவ்வாறு குறையிரக்க ''நகர்வலம் வந்தால் நீதி கிடைக்கும்'' என்று அசரிரியாக அருள் பாலிக்கிறார் இறைவர்.

மன்னவனும் மாறுவேடத்தில் அன்றைய தினமே நகர்வலம் வருகின்றான். திருமண வீடு ஒன்றின் முன்பாக ஐயம் கொள்ளத்தக்க இருவர் நின்று கொண்டிருப்பதைக் காண்கிறான் மன்னன். அவ்விருவரும் வேறுயாருமல்ல., மணமகனின் உயிரைக் கவரவந்த எமதூதர்களே.

ஒரு எமதூதன் மற்றொரு தூதனிடம் கேட்கிறான், ''மணமகன் பரிபூர்ணநலத்தோடு திகழ்கிறானே இவனுடைய உயிரை எப்படி கவர்வது? அதற்கு மற்ற எமதூதன் பதிலளிக்கிறான். ''முன்பொருநாள் காட்டில் ஒரு மரத்தினடியில் உறங்கிக் கொண்டிருந்த மறையவனின் மனைவியை எப்படிக் கொன்றோமோ அப்படி இந்த மணமகனையும் ஓர் உத்தியால் கொல்வோம்'' என்று கூறி மேலும் அவன் சொல்கிறான்.

''எப்போதோ யாரோ ஒரு வேடனால் எய்யப்பட்டு மரத்தின் இலையில் குத்திக் கொண்டிருந்த அம்பினைக், காற்றினால் தள்ளி, மறையவனின் மனைவியைக் கொன்றதுபோல், இங்கே திருமண வீட்டில் கட்டப்பட்டிருக்கும் காளை, தன் கயிற்றினை அறுத்துக் கொண்டு போகச் செய்து, மணமகனைக் கொன்று, உயிரினை எடுத்துப் போவோம்''. இவ்வாறு எமதூதர்கள் பேசிக் கொள்வதை மன்னன் மறைந்து நின்று கேட்க வேண்டும் என்பதற்காகவே அவனை நகர்வலம் வருமாறு ஆணையிட்டார் சொக்கநாதர்.

தூதர்கள் பேசிக் கொண்டவாறே, கயிற்றினை அறுத்துக் கொண்டுபோய் காளையானது மணமகனின் வயிற்றைக் கிழித்து கொன்றதைக் கண்ணாலும் கண்டான் மன்னன். மறையவனின் மனைவி கொல்லப்பட்டதற்கும், அவனால் குற்றம் சாட்டப்பட்ட வேடனுக்கும் ஏதும் தொடர்பு இல்லை என்பதைப் பின் மன்னன் தெளிந்து வேடுவனை விடுதலைச் செய்தான்.

இத்திருவிளையாடல் புராணக் கதையால் நாம் அறியும் ஒரு கருத்து இறைவன் தவறான தீர்ப்பை என்றும் அளிப்பதில்லை என்பதுதான். அந்த ஐந்தெழுத்தான், ஐந்து நாட்கள் நடைபெற்ற கிரிக்கெட்டு விளையாட்டிலும் கூட சரியான தீர்ப்பினையே வழங்கி இருக்கிறான். ஒரு அணிக்கு வெற்றி என்பதும், காலமின்மையால் டிரா, மழையினால் டிரா என்பதும் இந்த ஐந்துநாள் விளையாட்டிற்குத் தாம் கொடுக்கும் சரியான தீர்ப்பாக இருக்கமுடியாது என்பதால் அவன் கொடுத்த இந்தச் ''சமன்'' என்ற தீர்ப்பு, சரித்திரத்தைப் படைத்த சரியான தீர்ப்பே.

**

# காமாட்சியும் காமாக்கியாவும்

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி

தலைவர், தமிழ் இலக்கியத்துறை,

சென்னைப் பல்கலைக் கழகம்.

சக்தி வழிபாடு தொன்மையானது. தாய்த் தெய்வ (Mother godess) வழிபாட்டிலிருந்து இது முளைத்தது என்பர் மானிடவியலார் (Anthropologists). இந்தியாவில் சக்தி பீடங்கள் என்று பல பீடங்கள் - திருக்கோயில்கள் போற்றப்படுகின்றன. இவற்றுள் ஒன்றே இந்தியாவின் வடக்கில்-பங்களாதேஷ் என்ற தனி நாட்டுக்கும் கிழக்கே உள்ள அஸ்ஸாம் (பழைய பெயர் காமரூபம்) மாநிலத்தின் தலைநகராகிய கௌகாத்தியில் உள்ள காமக்கியர் கோயில். இக்கோயில் மிகப் பழமையானது என்று கருதப்படுகிறது. இது கூச் பீகாரை ஆண்ட நரநாரயணன் என்ற மன்னனால் 1566 ல் புதுப்பிக்கப்பட்டது. இக்கோயில் நெய்யினால் சுடப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்டது என்பர். (பார்க்க Encyclopaedia Indica பக்கம் 562).

அஸ்ஸாம் மாநிலம் பழமையாகக் காமரூபம் எனப் பெயர் பெறக் காரணம் சிவனிடம் காமத்தைத் தூண்ட முயன்ற காமன் எரிக்கப்பட்டு பின்னர் பழைய வடிவம் பெற்றதனால் என்பர். (தமிழகத்தில் காமதகன நிகழ்ச்சியும் அது பற்றிய வாவணியும் உண்டு.) பழைய நூல்களின்படி காமரூபம் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கையும் பூட்டான், ரங்பூர், கூச்பீகார் என்று அழைக்கப்படும் பகுதிகளையும் உட்கொண்டது. சில புராணங்களின்படி இன்னும் விரிவான எல்லைகளைக் கொண்டது காமரூபம். இந்நாடு பற்றி மகாபாரதத்திலும் குறிப்புண்டு. காமரூபம் முக்கோண வடிவுடையது.

காமக்கியாவின் கதை தக்கன் வேள்வியோடு தொடர்புடையது. தேவர்கட்கும் அசுரர்கட்கும் நிகழ்ந்த போரில் ச(க்)தி மாண்டாள். துயருற்ற சிவன் பித்து பிடித்தவனாய் அவள் உடலைச் சுமந்து உலகெங்கும் சுற்றினானாம். நடுங்கத்தக்க வகையில் கூத்தாடினானாம். அப்போது திருமால் தன் ஆழியால் ச(க்)தி உடலைத் துண்டு துண்டாக்கினானாம். விளைவு உலகமே நடுங்கியது. தக்கன் மாண்டான். ஆனால் தக்கன் மனைவி சிவனிடம் கணவனுக்கு உயிர்ப்பிச்சை கேட்டாள். அருளே வடிவான ஆண்டவனும் கேட்ட வரம் தந்தானாம். ஆனால் துண்டு துண்டான ச(க்)தியின் உடல் மண்ணுலகில் 51 (ஐம்பத்தியொரு) இடங்களில் வீழ்ந்தனவாம். அந்த இடங்கள் எல்லாம் புனித தலங்கள் ஆகினவாம். அவ்வாறு ச(க்)தியின் உடலுறுப்புகள் வீழ்ந்த வகையில் அவள் பிறப்புறுப்பு வீழ்ந்த இடமே காமக்கிய மலை. காமாக்கிய என்ற பெயரும் இதனால் ஏற்பட்டதே. இப்போதும் கோயில் குடையப்பட்ட அடியிடத்தில் செந்நீர் சேற்றிலிருந்து பக்தர் நெற்றியில் திலகமிடுகின்றனர்.

ச(க்)தியின் மற்ற உடலுறுப்புகள் கூறாக்கப்பட்டு விழுந்த இடங்கள் உச்சயினி முதலிய பிற இடங்கள். அவற்றுள் ஒன்று காஞ்சிபுரம் என்பதும் புராணக் கதை. காமாட்சி பற்றிக் கலைக் களஞ்சியம் கூறும் செய்தி வருமாறு;

> "தொண்டை நாட்டிலே காஞ்சிபுரத்திலே காமகோட்டம் என்னும் திருக்கோயிலில் உள்ள உமையம்மையார். காமாட்சி என்பதற்குத் தன் திருநோக்கால் உயிர்களின் விருப்பங்களை நிறைவிப்பவள் என்பது பொருள். மும்மூர்த்தியையும் கண்களாகக் கொண்டவள் என்றும் பொருள் செய்வர். க. பிரமன், அ. திருமால், ம. ருத்திரன். அட்சம் கண். கயிலையில் சிவபெருமானுடன் வீற்றிருந்த உமையம்மை ஒருமுறை சிவபிரான் கண்களைத் தம் கைகளால் மூடினார். அப்போது உலகெங்கும் இருண்டது. அத்தீவினையை போக்கிக் கொள்ள விரும்பிய காமாட்சி சிவபிரான் கட்டளைப்படி காஞ்சிபுரத்திலே முப்பத்திரண்டு அறங்கள் இயற்றியும் காஞ்சிக்கு அருகிலுள்ள கம்பா நதியிலே மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டும் சிவபிரானருள் பெற்றார்."

தக்கன் வேள்வி பற்றிய தலை சிறந்த தமிழ் நூல் ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப்பரணி.

இக்கட்டுரையின் நோக்கம் தமிழகத்தில் தலைசிறந்த சக்தி பீடமாகிய காஞ்சி காமாட்சியையும் அஸ்ஸாமின் தலைநகராகிய கௌகாத்தியில் உள்ள சக்தி பீடமாகிய காமாக்கியாவையும் ஒருசேர நினைத்துப் பார்ப்பதுதான்.

—o—

# பாரதப் போரில் பார்த்தசாரதி



டாக்டர் த. அமிர்தலிங்கம்

முதல் நாள் போரில் பாண்டவர் அணியில் உத்திரனும் சுவேதனும், மாண்டுபட இரண்டாம் நாள் போரில் பழிக்குப் பழி என்ற முறையில் மிக உக்கிரமாக வீமனும், அர்ச்சுனனும், அபிமன்யுவும் போரிட்டுத் துரியோதனனின் படைகளைச் சேதப்படுத்தியதைக் கண்டோம்.

முதல்நாள் போரில் வெற்றி கண்டு ஆரவாரித்த துரியோதனன், இரண்டாம் நாள் போரில் கலிங்க மன்னன் சக்கரதேவனும், அவனுடைய புதல்வர்களும், அளவிலாத சேனைகளும் வீமனின் கதைக்கும், அர்ச்சுனன் அபிமன்யு இருவரின் கணைகளுக்கும் பலியாகத் தோல்வியால் துவண்டுபோய் விடுகிறான்.

''நாளையப் போரில் பாண்டவர்களைப் பதிலுக்குப்பதில் நாசப் படுத்திஆக வேண்டும்'' என்று துரியோதனன் வீடுமருக்கும் துரோணருக்கும் மற்ற மன்னர்களுக்கும் கட்டளையிட்டு விட்டு அன்றைய இரவுப் பொழுதைப் பாசறையில் அமைதியின்றிக் கழிக்கிறான்.

பொழுது விடிகிறது. மூன்றாம் நாள் போரும் தொடங்குகிறது. இரண்டாம் நாள் போரில் வகுத்திருந்த கருட வியூகத்தையே மறுபடியும் வகுக்கிறார் வீடுமர். பாண்டவர் தளபதியான யாகசேனனை மறுபடியும் அர்த்தசந்திர வியூகத்தையே அமைக்கச் செய்கிறார் கண்ண பெருமான்.

''ஏலா அமரின் மூன்றா நாள் இரண்டு படையுந் திரண்டேறக்
காலார் திண்டேர் வீடுமனும் வகுத்தான் கருங் காருடவி யூகம்
மேலார் வென்றிப் பாண்டவர்தம் வெஞ்சேனையைக் கொண்டெஞ்சாமற்
தோலா அர்த்தசந்தரப் பேர் வியூகம் வகுத்தான் துளவானே''

—மூன்றாம் போர்ச்சருக்கம்-12.

பெயருக்குத்தான் யாகசேனன் பாண்டவர்களின் தளபதியே தவிர பாண்டவர் படையை நடத்தும் சூத்ரதாரி கண்ணபெருமானே என்பது நமக்குத் தெரிந்த ஒன்றுதான். அதனால்தான் அர்த்த சந்திர வியூகத்தைக் கண்ணபெருமானே அமைத்ததாகக் கூறி வில்லிப்புத்தூரார் ''அர்த்த சந்த்ரப் பேர் வியூகம் வகுத்தான் துளவோனே'' எனப் பாடியிருக்கக் காண்கிறோம்.

இருதரப்புப் படைகளும் இருபெரும் கடல்கள் மோதிக் கலப்பதைப் போல் ஆரவாரித்துக் கலந்து போர் புரியத் தொடங்குகின்றன. துரியோதனனின் வசைக்கு ஆளான வீடுமரும், துரோணரும், துரியோதனன் இன்று தாம் ஆற்றும் வீரப் போரினால் மனமகிழ்ச்சி கொள்ளச்செய்து விட வேண்டும் என்ற ஆவேசத்தோடு போரிடுகிறார்கள். காண்டீபத்தின் ஆற்றலினால் முந்தின நாள் தம்மை விரட்டி விரட்டியடித்தமா வீரனாகிய அருச்சுனனையும், கண்ணபெருமானையும் வளைத்துக் கொண்டு வீடுமரும், துரோணரும் ஒரு புறத்தில் போரிட்டுக் கொண்டிருக்க துரியோதனனும், அவனுடைய தம்பிமார்களும், சகுனியும் சேர்ந்து கொண்டு மறுபுறம் வீமனுடன் சமர் செய்கின்றனர். எண்ணிக்கையில் மிகுந்த யானைக் கூட்டம் ஒன்று சிங்கம் ஒன்றை வளைத்துக் கொண்டால் எப்படி இருக்குமோ அப்படியிருக்கிறதாம் வீமனைத் துரியோதனாதியர்கள் வளைத்து நிற்கும் காட்சி.

''சூரர்க்கெல்லாம் முதலெண்ணும் துரியோதனனுந் தம்பியரும
ஆரக்கவிகைக் காந்தாரன் முதலாவுள்ள அவனி பருஞ்
சேரத்திரண்டு கரிகளொடு சிங்கம் வளைத்ததெனச் சிங்க
வீரத்துவசனின்றுழிப்போய் வளைத்தார் சமரம் விளைத்தாரே

—மூன்றாம் நாள் போர்ச் சுருக்கம்-15.

அபிமன்யு எப்படி தன் தந்தையைக் காட்டிலும் ஆற்றல் மிக்க வீரனோ, அப்படி கடோத்கஜனும் தன் தந்தை வீமனையும், விஞ்சிய மாவீரன். தந்தை யொருவரைச் சுற்றிச் துரியோதனாதியர்கள் கூட்டமே வளைத்து நிற்க, தாவிக் குதித்து வரும் கடோத்கஜனும், தன்னுடைய கதையினால் அனைவரையும் மோதி விரட்ட நேரமாகக்கூடும் என்பதால், வில்லினில் அம்புகளைத் தொடுத்துச் சீறும் அம்புகளால் அனைவரையும் சிதறி ஓடச் செய்கிறான்.

துரியோதனனைச் சூழ்ந்து நின்று காவல் செய்த கணக்கற்ற வீரர்களின் தலைகளைச் சீவிக் கொண்டு பறக்கின்றன கடோத்கஜன் விடும் அம்புகள். ஆகாயமே தெரியவில்லை. எங்கு நோக்கினும் கடோத்கஜனின் அம்புகளால் சிதறுண்ணும் துரியோதனனின் படை வீரர்களின் தலைகளே தெரிகின்றன. அத்தலைகளிலிருந்து கொட்டும் இரத்தமே வெள்ளப் பெருக்கினைப் போல அந்தக்

குருச்சேத்திரப் போர்க்களம் முழுதும் ஓடிக்கொண்டும் இருக்கிறது.

பிறைச் சந்திரனின் வடிவில் அமைந்த கடோத் கஜனின் அம்புகள், துரியோதனின் தேர்க் கொடியையை வீழ்த்தித் தேரில் பூட்டியிருக்கும் குதிரைகளை வீழ்த்தி, இரத்தினம் பதித்த துரியோதனின் பொற்கவசத்தை ஊடுருவி துரியோதனையும் தாக்க, அவனும் அந்தக்கணமே மூர்ச்சித்து விழுகிறான்.

''துவசம்பிளந்து தேரூருந் துரகம் பிளந்து சுடர் மணிப் பொற்
கவசம் பிளந்து மார்பகமும் பிளந்துருவக் கடோற்கசன்தான்
நவசந்திரமா முனைவாளி தொடுத்தான் தொடுத்த நாழிகையின்
அவசம் பிறந்து தம்பியர் முன் விழுந்தான் ஒருவர்க் கழியாதான்''.

—மூன்றாம் போர்ச் சருக்கம்.

அண்ணன் கடோத்கஜனுக்குத் துணையாக அங்கு வேகமாக வந்து சேர்ந்துகொண்ட தம்பி அபிமன்யு, தானும் ஒரு வேல் எடுத்து, துரியோதனனின் தேர்ப்பாகன் மீது செலுத்த அவனும்மடிந்து சாய்கின்றான். இவ்வாறு கடோத்கஜனும் அபிமன்யுவுமாகச் சேர்ந்து கொண்டு, வீமச் சிங்கத்தை வளைத்துநின்ற துரியோதனயானைக் கூட்டத்தை விரட்டியடித்துக் கொண்டிருக்கத் ''துரியோதனன் சாய்ந்தான்'' என்று சேதி போய் எட்டுகிறது வீடுமருக்கு.

அர்ச்சுனனுடன் போர் புரிவதை விட்டுவிட்டு உடனே ஓடி வருகிறார் வீடுமர் துரியோதனன் இருக்கும் இடத்திற்கு. துரியோதனனை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு அவனுடைய புண்பட்ட மார்பைத் தடவிக் கொடுத்து அவனுடைய மயக்கம் தெளிவதற்கு மருந்தையும் கொணர்ந்து அவனுக்கு வாயில் ஊட்டுகிறார் வீடுமர். துரியோதனனும் மருந்தினை உட்கொண்ட அளவில் மயக்கம் நீங்கி எழுகிறான். ''துரியோதனா! சற்றே நீ பாதுகாப்பாய் இருந்து இளைப்பாறு. உன்னைக் காயப்படுத்திய பாண்டவர்களுக்கு நான் பாடம் புகட்டி வருகிறேன்'' என்பதாகக் கூறி வீடுமர் தம் வில்லுடன் மீண்டும் போர் புரியத் தொடங்குகிறார்.

தன்னுடைய காவலை மீறி பாண்டவர்கள் துரியோதனைத் தாக்கிக் காயப்படுத்தும் அளவிற்குப் போய்விட்டதே என்ற கவலை வீடுமருக்கு. இதற்காகவும் போர் முடிந்த இரவில் பாசறையில் வைத்துத் தன்னை என்னென்ன வைவானோ துரியோதனன் என்ற பயமும் அதில் கலந்து கொண்டது. பாண்டவர் படைகளை இனியும் சும்மா விடலாகாது என்ற வெறி, அவருக்கு மிகுந்துவிட அவருடைய வில்லிலிருந்து கிளம்பிடும் அம்புகள் அக்கினியைப்போல் சிவக்கின்றன. புயலினைப் போல் சீறுகின்றன.

கோபத்தில் கொதிக்கும் வீடுமரைப் அப்பொழுது கண்ட அனைவரும், அவருடைய தோற்றத்தைக் கண்டே அஞ்சி நடுங்குகிறார்கள். அவருடைய கையில் இருப்பது வில்லல்ல, மேருமலை. இவரும் வீடுமர் அல்ல, திரிபுரத்தை அழிக்க எழுந்த பரமசிவன் என்பதாகப் பாண்டவர் படை வீரர்கள் பலரும் நடுங்கி ஓடுகின்றனர்.

திருப்பாற்கடலைக் கடைந்தபோது மந்தர மலை சுழன்றதைப் போல வீடுமரும், சுழன்று சுழன்று பாண்டவர் படை வீரர்களின் மார்புகளிலும், தோள்களிலும், முகங்களிலும், கண்களிலும் அம்புகளை எய்து அவர்களைக் கொன்று குவிக்கத் தொடங்குகிறார். வீடுமரின் வீரத்திற்கும் கோபாவேசத்திற்கும் பாண்டவர் படையின் பெரும்பகுதி செத்து மடிய நேரிடுகிறது. வீடுமரிடமிருந்து பாண்டவர் படைகளைக் காக்க வேண்டும் என்ற உணர்வு அன்றைக்கு ஏனோ அர்ச்சுனனிடம் ஏற்படவில்லை. வீடுமர் இருக்கும் இடம் நோக்கிச் செல்லாமலே, மற்றொரு பக்கமாக அர்ச்சுனன் பகைவீரர்களுடன் போர் செய்து கொண்டிருக்க கண்ணபெருமான் வீடுமரை நோக்கிப் பலமுறையும் தம்முடைய தேரைத் திருப்பி ஓட்ட முயன்றும் அர்ச்சுனன் வேண்டாம் எனத் தடுக்க, கண்ணபெருமானுக்கே அர்ச்சுனன்மேல் கோபம் உண்டாகிவிடுகிறது. ''என்ன அர்ச்சுனா, என்ன உனக்கு நேர்ந்தது? வீடுமர் அங்கே நம்முடைய படைகளை நாசப்படுத்திக் கொண்டிருக்க, இங்கே நீ ஏதோ போர் புரிவதைப் போல, பாவனை செய்து கொண்டிருக்கிறாயே தவிர வீடுமர் மேல் ஏன் அம்பை எய்ய மறுக்கிறாய்? வீடுமர் இருக்கும் இடம் நோக்கித் தேரையும் செலுத்தவேண்டாம் எனத் தடுக்கிறாய். இதுதானா உன் வீரம்? இனியும் உன்னை நம்பிப் பயனில்லை. நானே வீடுமரை எதிர்த்துப் போர் செய்கிறேன்'' என்பதாகக் கூறி அர்ச்சுனனுடைய பதிலுக்காகவும் காத்திராமல் தம்முடைய சக்கராயுதத்தை ஏந்தி தேரிலிருந்து தரையில் குதிக்கிறார்.

கண்ணபெருமான் தேரிலிருந்து இறங்கி, வீடுமரை நோக்கி விடுவிடென்று முன்னேற, அர்ச்சுனன் தேரிலிருந்து தானும் இறங்கிக் குதித்து, கண்ணபெருமானின் தாள்களைப் பணிந்து, தன்னுடைய தவற்றைப் பொறுக்குமாறு வேண்டுகின்றான்.

## பட்டாசுப் பண்டிகை

பட்டாசுப் பண்டிகை வந்தாச்சு
பட்டாடை கூட தைச்சாச்சு
துப்பாக்கி யாலே சுட்டுடுவேன்
டுப் டுப் டுப் டுப் டுப்.....
(பட்டாசு)

ஊரிலே இருந்து தாத்தா பாட்டி
நேத்தே வீட்டுக்கு வந்தாங்க
ஊசிப் பட்டாசு கம்பி மத்தாப்பு
எல்லாம் வாங்கித் தந்தாங்க
(பட்டாசு)

அணுகுண்டு வெடியா வேணாங்க
அம்மாவுக்குப் பயம்பயம்
தொட்டிலில் தூங்கும் தங்கச்சிப் பாப்பா
வீர்வீர் எனவே அழும்அழும்
(பட்டாசு)

நரகா சூரன் இறந்த தனாலே
நாம் கொண்டாடும் பண்டிகை
விடுமுறை யோடு இனிப்பும் கிடைக்கும்
தினமும் வந்தா தேவலே
(பட்டாசு)

—அ. செவ்வேள்

''ஆழியெடுத்தனன் வீடுமனைப் பொருதாவி அழித்
திடுவான்
ஊழிமுகக் கனல் போல் எழும் அப்பொழுதோடி
யருச்சுனனும்
தாழி தனக்கு முன் வீடு கொடுத்தருள் தாளி
ணையைப்பிடியா
வாழி உனக்கிவ ரோஎதிர் வித்தக மாயனெனத்
தொழுதான்''.

—மூன்றாம் போர்ச்சுருக்கம்.15

''கண்ணா! மணிவண்ணா! எளியேன் செய்த பெரும்பிழையை மன்னித்துவிடு, நானே என் காண்டீபத்தால் வீடுமரை எதிர்கொள்கிறேன். எல்லாம் வல்ல உனக்கு இவரா சமமாவார்? அன்றைக்கு ஆயுதம் கையில் எடேன் என்று நீ செய்த உறுதி பொய்க்க நானா காரணமாவது! அந்தப் பழி இந்த அர்ச்சுனன் கொள்ள கண்ணா நீ காரணமாகலாமா? என் மீது கொண்ட கோபத்தை அருள் கூர்ந்து மாற்றிக்கொள். உன் உள்ளம் அன்பின் பெருவெள்ளம். பாலகனாய் இருந்தபோது, உன் அடியான் ஒருவன் கேட்டுக் கொள்ள அவன் வீட்டுத் தாழிக்கும் அருள்புரிந்த வள்ளலே! நான் உன் அன்புமிக்க மைத்துனன் அல்லவா! எனக்கு நீ அருள் புரிதல் ஆகாதோ''. என்று அர்ச்சுனன், ஆபத்பாந்தவனும், அனாதை இரட்சகனும், தீனதயாளனுமாகிய கண்ணபெருமானின் திருவடிகளில் வீழ்ந்து அந்த குருசேத்திரப் போர்க்களத்தில் அனைவரும் காண வேண்டுகிறான்.

கோகுலத்தில் கண்ணன் செய்த பாலலீலைகளைப் பொறுக்க இயலாத அன்னை யசோதா, கண்ணனை விரட்டிவர, ததிபாண்டவன் மனையில் கண்ணன் ஒளிந்து கொண்டான். கண்ணன் ஒளிந்துக் கொண்டிருப்பதைத் தாயிடம் கூறாதிருக்க வேண்டுமானால், தனக்கும் தனக்குச் சொந்தமான வீட்டிலிருப்பவர்க்கும், தன் வீட்டிலிருக்கும் தயிர் பானைக்கும்கூட முத்திதர வேண்டுமென வேண்டினான் ததிபாண்டவன். கண்ணன் அவ்வாறே அருளினார். கண்ணனின் இத்தகைய கருணை உள்ளத்தை எடுத்துக்காட்டித் தன் தவற்றை மன்னிக்குமாறு வேண்டுகிறான் அர்ச்சுனன்.

கண்ணபெருமான் ஆழி ஏந்தித் தன்னை நோக்கி வருவதைக் கண்ட வீடுமரும் கண்ண பெருமானால் சம்ஹரிக்கத் தக்கப் பெரும் பாக்கியம் தனக்கு வாய்க்கப் போகிறதே என்று பேரானந்தம் கொள்கிறார். அவரும் தன்னுடைய தேரிலிருந்து இறங்கிக் கண்ணபெருமானை நோக்கி ஓடி வருகிறார், மாயவனைப் போற்றுகிறார்.

''ஆரணகற்பித மாதவ அச்சுத ஆழியிடைத்துயிலும்
காரண சிற்குண ரூபமலர்க்கொடி காதல் மனத்
துறையும்
நாரண அற்புத வானவருக்கொரு நாயக நிற்பணி
யும்
வாரண முத்தி விசாலதலத்திடை வாழ்வுற வைத்
தவனே

—மூன்றாம் போர்ச் சுருக்கம்.17.

''ஆவி அழித்தனை தூணிலுதித்தடல் ஆடகனைத்
தலைநாள்
மாவலியைச் சிறு மாணுருவத்துடன் வார்ச்சிறை
வைத்தனையால்
ஏவிலரக்கனை வீழஅடர்த்தனை யானொரிலக்
கெனவே
நீவலியிற் சின மூளுமனத்தொடு நேமியெடுத்ததுவே

—மூன்றாம் போர்ச் சருக்கம். 18.

''வானரகிற் புகுதாமல் எனக்குயர் வானுலகை
தருவான்
நீ நினைவுற்றது போன பிறப்பிலென் நீடுதவப்
பயனே
யானுமினிப் பிறவாமல் அளித்தருள் ஈசன் எனப்
பரவா
ஞானமனத்தொடு நாகுழறப் பல நாடியுரைத்
தனனே

—மூன்றாம் போர்ச் சுருக்கம்.19.

''கண்ணபெருமானே! முன் ஒரு அவதாரத்தில் நரசிங்கமாகத் தோன்றி இரணியனையும், பின் ஒரு அவதாரத்தில் வாமனராகத் தோன்றி மாவலியையும், மற்றுமொரு அவதாரத்தில் இராவணனையும் மாய்த்த பரம்பொருளே! என்னையும் ஒரு இலக்காய் கொண்டு அழிக்கக் கருதுவாய் ஆனால், அது நான் முன் பிறப்பில் செய்த தவம் அல்லாமல் வேறில்லை. அன்றைக்கு ஆதிமூலமே என்று உனையழைத்த ஆனையைக் காக்க ஆழி எடுத்து முதலையைக் கொன்று முத்தியழித்தாய். எனக்கு இன்று நீ முத்தியளிக்க முன்வந்தாய் என்றால் அதற்கு நான் பெரும் பாக்கியமே செய்திருக்க வேண்டும். ஆழியை விட்டு என் ஆவியை ஏற்றுக்கொள் கண்ணா! பிறவியினி இல்லாத முத்தி நிலையை எனக்கருளிச் செய்'' என முகமும் அகமும் மலர்ந்து வீடுமர் கண்ணபெருமானை வேண்டிக் கொள்கிறார்.

வீடுமர், திருமாலே கண்ணபெருமானாகத் தோன்றியிருக்கும் அவதாரச் சிறப்பை நன்கு உணர்ந்தவர். திருமாலின் பரம பக்தர். அப்படிப்பட்ட பக்தராகிய வீடுமர், பரம்பொருளாகிய கண்ணபெருமானின் திருக்கைகளால் தாம் இரட்சிக்கப்படுவதை விழையாமல் இருப்பாரா? உண்மையில் கண்ணபெருமான் தம் கையில் சக்கரத்தை ஏந்தி, வீடுமரை நோக்கிப் பாய்ந்ததும் கூட வீடுமரின் வாக்கைக் காப்பதற்கே ஆகும்.

கண்ணபெருமான் பாரதப்போரில் பார்த்தனுக்குத் தாம் சாரதியாக மட்டுமே பணிசெய்வதல்லாமல், படைக்கருவிகள் ஏதும் எடுப்பதில்லையென, முன்பு துரியோதனன் தன் சகாயம் நாடி துவாரகைக்கு வந்தபோது, துரியோதனனுக்கு வாக்களித்திருந்தார். துவாரகையில் இருந்து அத்தினாபுரிக்கு மீண்ட துரியோதனன் கண்ணபெருமான் தனக்குக் கொடுத்த உறுதியினை அரசவையில்

---

## நூல் கிடைக்கப் பெற்றோம்

டாக்டர் சி. சிதம்பர தாணுப்பிள்ளைஅவர்கள் உருவாக்கியுள்ள 'பிளவை நோயும் மருந்தும்' என்ற நூல், சிறந்த சித்த வைத்திய நூல் ஆகும். இந்நூலில் 40 வகையான பிளவைகள் (கட்டிகள்) விளக்கப்பட்டு, நோய் நிவாரணத்திற்கான மருந்து வகைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. 120 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் விலை ரூபாய் 15.

இந்நூலைப் பெறவிரும்புவோர் நாடவேண்டிய முகவரி

சித்தமருத்துவ நூல் ஆராய்ச்சி
நிலையம்
இ 32 அண்ணா நகர் (கிழக்கு)
சென்னை—600 102.

---

அறிவித்த பொழுது வீடுமர், 'கண்ணபெருமான் ஆயுதம் எடேன் என்றாரா? அவரை ஆயுதம் எடுக்க வைப்பான் இந்த வீடுமன். மிகக் கடுமையாகப் போர் புரிந்து பாண்டவர் படைகளைநாசப் படுத்தி, கண்ணபெருமானையும் ஆயுதம் எடுக்க வைப்பேன்' என்று அன்று உரைத்திருந்த உறுதி மொழியை அறிந்திருந்தார் கண்ணபெருமான். தன் வாக்குப் பொய்த்தாலும் பொய்க்கலாம். தன் அடியவனின் வாக்கு பொய்க்கலாகாது என்று விழைகிறது கண்ணபெருமானின் திருவுள்ளம். அதனால்தான் இன்றைய மூன்றாம் நாள் போரில் சக்கராயுதத்தை வீடுமர்மேல் தொடுப்பதாகக் கூறி கண்ணபெருமான் ஆழியை எடுத்து இந்தத் திருவிளையாடலையும் புரிந்தார் என்று சொல்ல வேண்டும். ''இன்ன தன்மையன் என்று அறிவொண்ணா எம்மானை, எளிவந்தபிரானை'' என்று இறைவனின் தன்மையைப் பாடுவார் சுந்தரமூர்த்தி நாயனார்.

பக்தர்களின் பக்தி உள்ளத்தை மெச்சி, அவர்கள் விழைந்த வண்ணமாக அருள்புரிவது கடவுளின் கருணை உள்ளமாகும். அத்தகையகருணை உள்ளத்தால்தான் கணணபெருமான் தாம் செய்துதந்திருந்த சத்தியத்தையும் மறந்து வீடுமருக்காகத் தம் கைவிரலாழியை எடுத்தார். அருச்சுனன் தன் தவற்றைப் பொறுத்தருளவேண்டி தாள் பணிந்து வேண்டிய படியாலும், வீடுமரும் துதித்துக் கண்ண பெருமானிடம் முத்தி தந்தருளவேண்டி நின்ற படியாலும், தம் சினம் தணிந்த கண்ணபெருமான் மறுபடியும் தேரில் ஏறிப் பார்த்தசாரதியாகவே பூபாரம் தீர்க்கும் தம்முடைய பணியை தொடர்ந்து ஆற்ற முற்படுகிறார். அர்ச்சுனனும் ''யாரெதிர் நிற்கினும், யாவர் தடுப்பினும்யானினி இப்பகலே சேர முடுக்குவன்' என்று உறுதிகூறி மறுபடியும் போரில் வேகம் காட்டுகின்றான்.

கண்ணபெருமானே ''வேகம் போதாது'' என்று கருதும்படியாக மெத்தனமாகத்தான் போர் புரிந்து விட்டதை எண்ணி வெட்கப்படுகிற அருச்சுனன், தன்னுடைய வில் திறமையை மேலும் கூட்டிப் போர் செய்யத் தொடங்க, ஆயிரம் ஆயிரமான அம்புகள் அர்ச்சுனனின் வில்லிருந்து சீறிப் பாய்கின்றன. பகைவர்களின் மணிமகுடங்களைப் பொடியாக்குகின்றன பல அம்புகள். துரியோதனன் படை வீரர்களின் தலைகளிலிருந்து மூளைகள் சிதறிப் போர்க்களமே சேறு ஆகும்படியாகப் பாய்ந்து அவர்களைக் கொல்லுகின்றன பல அம்புகள். பகைவர்களின் உடல்கள்தோறும் பாயும் அம்புகளால் அங்கே பலப்பல இரத்த அருவிகள் பீறிட்டுப் பாய்ந்து ஓடுகின்றன. வீடுமர் ஒருவர் மட்டுமே அர்ச்சுனனின் ஆற்றலுக்கு ஈடு கொடுத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடிகிறதே தவிர, மற்றவர்கள் எல்லாம் மேனி புண்பட, இன்னுயிர் இருக்குமோ பறக்குமோ என்பதாக அஞ்சி, மனம், நடுங்கித் துடிக்கிறார்கள். ''சாது மிரண்டாலே காடு கொள்ளாது'' என்பார்கள். அருச்சுனன் மிரண்டால் குருசேத்திரம் கொள்ளுமோ?

மலைப் பாம்புகளோ என்று மலைக்கும்படியாக அங்கங்கே யானைகளின் அறுக்கப்பட்ட துதிக்கைகள் கிடக்கின்றன. இறந்து கிடந்தவர்களின் அறுபட்ட தலைகளைக் கௌவிக்கொண்டு நரிகள் பல ஓடிக்கொண்டிருக்க, மனித தலை கொண்ட அதிசய மிருகங்களாக அவைகள் காட்சியளிக்கின்றன. மாண்டுகிடப்பவர்களின் மகுடங்களைக் கையில் எடுத்துக் கொண்டு, அவற்றைத் தாளமாகத் தட்டிக் கொண்டு மூன்றாம் நாள் போரில் முகுந்தனின் மைத்துனன் அர்ச்சுனன் காட்டிய பராக்கிரமத்தைக் கொண்டாடிப் பேய்களும் நடனமாடிக்களிக்கின்றன. கௌரவர்கள் சிந்தியஇரத்தம் ஆதவன் மேலும் பட்டு, அவனுடலைக் கறைபடச் செய்து விட்டதால், கதிரவனும் தன்கறையைப் போக்கிக் கொள்ள மேற்குக் கடலில் மூழ்க, எங்கும் இருள் பரவிக் கொண்டிருக்கிறது.

பாண்டவர் படையினர் அருச்சுனன் ஆற்றிய வீரப்போரை ஆரவாரித்துப் போற்றவும், துரியோதனன் படையினர் தம் பக்கத்தில் மாண்டுபட்ட மன்னருக்காக அழுது அரற்றவும் மூன்றாம் நாள் போர் நிறைவுற்றது என்கிறார் வில்லிபுத்தூரார்.

''தருமன்மா பெருஞ்சேனை தன்னுளார்
தங்களாதரத்தொடு தனஞ்சயன்
பொருவில் ஆண்மையும் வீமன்மாமகன் பொருத
வீரமும் புகழ்ந்துபாடினார்
அரவகேதனன் சேனை தன்னுளார் அழிந்த
மன்னருக்கு அழுது அரற்றினார்.
இருவர் சேனையும் கண்படாமல் அன்றிரவு
பட்டதென்னென்று இயம்புவாம்'

(மூன்றாம் போர்ச் சருக்கம் 29)

—(தொடரும்)

# வாசகர் எண்ணங்கள்

தமிழகப் பாரிவள்ளலின் இளவல் ஆர். எம். வீ. அவர்கள் அறநிலையத்துறை அமைச்சுப்பணி செய்து வருவது ''தங்கத்தட்டில் இரத்தினமணி மாலை வைத்திருப்பது'' என வாரியார் சுவாமிகள் வாழ்த்திய பிறகு வாழ்த்திட வயதில்லா விட்டாலும் வணங்குகிறேன்.

—பாபநாசம் கே. இராசாராமன்
தமிழ்நாடு, திருக்கோயில் பணியாளர்கள்
மத்திய சங்கம், பாபநாசம்

* * *

''திருக்கோயில்'' இதழைத் தொடர்ந்து படித்து வருகிறேன். இதழைப் படிக்கப் படிக்க நேரம் போவதே தெரியவில்லை.

—சி. ஆறுமுகம்
மேற்கு தாம்பரம், சென்னை-45

* * *

ஒவ்வொரு மாத இதழையும் படிப்பது வழக்கம். ஒவ்வொரு கதை, கட்டுரைகளும் படிக்கும் பொழுது என் மனதில் அப்படியே பதியும். குறிப்பாக இம் மாத வெளியீட்டில் ''அநபாயச் சோழனின் இதயக் கனி'' என்னும் பாடல் படித்தேன். மிகவும் அற்புதமாக இருந்தது.

—ஆர். வீரப்பன்
அர்ச்சகர், போத்துராவுத்தன்பட்டி, 639 119


# இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை - "திருக்கோயில்" திங்கள் இதழ் - ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 300/- நிர்ணயித்திருப்பது பற்றிய ஆணையர் சுற்றறிக்கை

நம்முடைய அறநிலையத்துறையின் வெளியீடான 'திருக்கோயில்' திங்கள் இதழுக்கு ஆலயங்கள் செலுத்த வேண்டிய ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 300 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகவே, ''திருக்கோயில்'' இதழ் கிடைக்கப் பெறும் அனைத்து ஆலய நிர்வாக அதிகாரிகளும் உயர்திரு ஆணையர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை—34 என்ற முகவரிக்கு ரூ. 300 (ரூபாய் முன்னூறு மட்டும்) வங்கி வரைவோலையாகச் செலுத்தவேண்டும் எனப் பணிக்கப்படுகிறது. திருக்கோயில் கிடைக்கப்பெறாத திருக்கோயில் நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஆலய நிர்வாகிகள் அனைவரும் அவ்வாறே ஆணையர் அவர்களின் முகவரிக்கு ரூ. 300 (ரூபாய் முன்னூறு மட்டும்) வங்கி வரை வோலை மூலம் செலுத்தி திருக்கோயில் உறுப்பினர்கள் பட்டியலில் தங்கள் பெயரை இணைத்து கொள்ளப் பணிக்கப்படுகிறது.

கோயில் நிதி நிலைமையைக் காரணம் காட்டி மேற்குறித்த திருக்கோயில் ஆயுள் உறுப்பினர் கட்டணம் செலுத்துவதில் எந்தத் தாமதமும் செய்யலாகாது என்று பணிக்கப்படுகிறது.

அனைத்து துணை மற்றும் உதவி ஆணையர்கள் தங்கள் ஆட்சி வரம்பிற்குட்பட்ட பட்டியலிட்ட மற்றும் பட்டியலிடப் பெறாத திருக்கோயில்களின் செயல் அலுவலர் -தக்கார்- அறங்காவலர் குழுத் தலைவர்-பரம்பரை அறங்காவலர்களுக்குச் சுற்றறிக்கை மூலம் தெரிவித்து ஆய்வர் மற்றும் செயல் அலுவலர்களுக்குத் தகுந்த அறிவுரை வழங்கி ஆயுள் சந்தா வசூலில் தீவிர கவனமும் ஆர்வமும் காட்டப் பணிக்கப்படுகிறார்கள். ''திருக்கோயில்'' இதழுக்கு இவ்வாறு ஆயுள் கட்டணம் உடன் அனுப்பி வைப்பதுடன் பழைய உறுப்பினர் கட்டண பாக்கிகளையும் உடன் செலுத்த அனைத்து ஆலய நிர்வாகிகளும் பணிக்கப்படுகிறார்கள்.

(ஒ-ம்)
ஆணையர்



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.